Registered No. M. 878.

பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரதி ஆங்கில௴
15௳யில் பிரசுரமாகி நடைபெறும்

மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி 4.	1913௵ ஆகஸ்டு௴ 15௳ பிரமாதீச௵ ஆடி௴ 31௳	பகுதி 4.

ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கசாமி ஐயர், B. A., B. L., F. T. S.
} பத்திராதிபர்.

வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணா 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

பொருளடக்கம்.

(CONTENTS)

1. மரணபயம் வேண்டாம்—ப. நாராயண ஐயர். 111
Fear not death—P. Narayana Iyer.

2. கர்மம்—இசக்கியாடும் பெருமாள் பிள்ளையவர்கள். 119
Karma—Esakiadum Perumal Pillai.

3. ஆர்யர்களின் பூர்வ நாகரிகம் ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர் 127
Ancient Aryan Civilization— R. S. Narayanaswamy Iyer

4. பிரஹ்மக்ஞாநதர்சநம் (பாலபாடம்) வி. வெங்குசாமி ஐயர் 139
Elements of Theosophy—V. Vengusamy Iyer.

5. ஸமாசாரம்—பத்திராதிபர். 141
News—Editor.

6. உதாஸீநஸாது ஸ்தோத்ரம்—ஆர். சுந்தரராஜ ஐயர்.
Udasina Sadhu Stotram—R. Soondararaja Iyer.

ஐந்து ஸஞ்சிகைகள் வெளியாய் விட்டன.

பக்தமாலா வசனம்.

ஸ்ரீ சாது பாலகிருஷ்ண முதலியாரால் மகாராஷ்டிர பாஷையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது. இந்த வாசிப்பதினால் தெய்வ பக்தி, வைராக்கியம், நல்லொழுக்கம் முதலியன இருபாலர்க்கும் செவ்வனே உண்டாகும். இதில் 182 சிறந்த பக்தர்களின் சரித்திரங்கள் அடங்கியிருக்கின்றன. இச்சரித்திரங்களிலுள்ள விஷயங்களை ஒவ்வொருவரும் வாசித்துத்தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். இது டிம்மி 8 பாரங்கொண்ட ஸஞ்சிகை வடிவமாய் 12 ஸஞ்சிகையில் முடிவுபெறும். சொற்ப காப்பிகளே அச்சடித்து வருகிறோமாகையால் வேண்டியவர்கள்உடனே எழுதிப்பெற்றுக்கொள்ளவும். 12 ஸஞ்சிகைகளும் முடிந்து ஒரே புஸ்தகமாய் அனுப்பும்பொழுது அதன் விலை வி. பி. சார்ஜ் உள்பட ரூபா 4. ஆகையால் இப்பொழுதே ஆர்டர் செய்துகொள்ளுங்கள்.

சந்தா விவரம்.

12 ஸஞ்சிகைக்கு முன்பணமாக வி. பி. சார்சு உள்பட ரூ 2—12—0

சந்தாதார்களின் சௌக்கியத்தை உத்தேசித்து இரண்டு தடவையாக வி. பி. யிலனுப்ப சந்தா ரூ 1—7—0

Apply to—மானேஜர், 'பக்தமாலா' ஆபீஸ்,
107, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 4. } 1913௵ ஆகஸ்ட௴ 15௳
பிரமாதீச௵ ஆடி௴ 31௳ { பகுதி 4.

மரண பயம் வேண்டாம்.

(89-ம்பக்கத் தொடர்ச்சி.)

மரணத்திற்கும் தூக்கத்திற்கும் உள்ள வித்தியாஸமென்னவென்றால், மரணத்தில், ஆத்மாவான ஜீவன், ஸ்தூல சரீரத்திற்குள் திரும்பி நுழையாதபடி அதினின்று வெளியேறி விடுகிறான்; தூக்கத்திலோ அப்படியன்று, ஸ்தூல சரீரத்தை ஆத்மா முற்றும் விட்டு விலகுகிறான் இல்லை. அதனுள் திரும்ப நுழைகிறான். ஆகவே, இறந்த உன்னுடைய சிநேகிதன் எந்நிலையை (அவஸ்தையை) அடைந்திருக்கிறானோ, அந்நிலையை தூங்கும் காலத்தில் நீ அடைகிறாய். அந்நிலையைப் பற்றி நான் இன்னும் சொல்லுகிறேன்.

9. மரணத்திற்குப் பிறகு ஜீவனின் கதியைப்பற்றிப் பலவாறான அபிப்பிராயங்களுண்டு; அவைகளில் பெரும்பான்மையானவைகள், பிராசீந சமய சாஸ்திரங்களை விபரீதமாகக் கிரகித்து அநர்த்தம் பண்ணினமையால் ஏற்பட்டவைகள். ஒரு காலத்தில் மேல்நாடாகிய ஐரோப்பா கண்டத்திலுள்ளவர்கள், மரணத்திற்குப்பிறகு ஜீவன் நித்யமான தண்டனைக்கு உள்ளாகிறான் என முட்டாள்தனமாய் நம்பி இருந்தார்கள். இப்போது கூட அந்த அறிவில்லாத நம்பிக்கை ஐரோப்பியரை விட்டு பூர்ணமாகவிலகி விட்டதாகச்

சொல்ல முடியாது. இந்த பயத்தை உண்டுபண்ணக்கூடிய அபிப்பிராயத்தை கிறிஸ்தவ பாதிரிமார் சாதாரண ஜனங்களை நல்வழிப்படுத்துமாறு, உபயோகித்து வந்தார்கள். நாகரிகம் அதிகப்பட இந்த அபிப்பிராயம் அறிவில்லாத தென்றும், பகடிக் கேதுவான தென்றும், ஈசுவரனையே தூஷிக்கிறதாகவும் அறிவுள்ள ஜனங்கள் கருதுவாராயினர். மேல் நாட்டில் ஸமயவாதிகள் இந்த அபிப்பிராயத்தை இப்போது துறந்து விட்டார்கள். முன்னதைவிட கொஞ்சம் அறிவுபற்றிய அபிப்பிராயம் இப்போது நடை பெறுகிறது. ஆனல் இதுவும் வியக்தமாகவும் தெளிவாகவுமில்லை. இது இன்னும் உண்மையை விட்டு விலகினதாகவே இருக்கிறது. கடவுளை கோபாவேசம் பூண்ட பூதமாகவே கிறிஸ்தவர்கள் இன்னும் மதிக்கிறார்கள். அதனல் அவர் தம்முடைய குழந்தைகளாகிய ஜனங்களைத் துன்பப்படுத்த ஆயத்தமாயிருக்கிறவராகவே நினைக்கிறார்கள். இது கிறிஸ்துவின் உபதேசத்திற்கு முற்றும் மாறானது. "கடவுள் நம்முடைய பிதா. அவர் நம்மை ஆதரிக்கிறார். நம்மிடம் அன்பு பாராட்டுகிறார். கடவுள் அன்பே. அவரால் சிருஷ்டிக்கப்பெற்ற பிரபஞ்சமும் அன்பார்ந்தவும் அறிவுபற்றியவுமான தர்ம விதிகளை அநுசரித்தே எப்போதும் நடைபெறுகிறது." இந்த உண்மைகளை அறிந்த அநேகர் இறக்குமுன் இவ்வுலகத்தில் நடந்து வருகிற தர்ம விதிகள், இறந்தபின் மறு உலகத்திலும் நடைபெறவேண்டுவன என்று இப்போது அபிப்பிராயம் கொண்டு வருகிறார்கள். ஆனல் இவர்களும் கூட வியக்தமாய் உண்மையை அறிந்தார்களில்லை. எங்கேயோ கண்ணுக்கெட்டாத தூரத்தில் ஸ்வர்க்கம் என்ற லோகம் ஒன்று இருக்கிறதாம். இறந்த மேல் ஏதோ ஒரு நாளில் இறந்தவர்களின் விசாரணை ஏற்படுமாம். இவைகள் போன்ற தெளிவில்லாத சில மூடத்தனமான நம்பிக்கைகள் இப்போதும் கிறிஸ்தவர்களிடம் உலாவுகின்றன. உண்மையில் நடக்கிற விஷயங்களை இவ்வபிப்பிராயங்களை உபதேசிக்கிறவர்கள் நேரில் அறியார். இறந்த மேல் ஜீவன் அடையும் கதி என்ன என்பதை இவர்கள் தெரிந்து கொண்டாரில்லை; பிறர் சொல்லும் வார்த்தையைத்தான் சொல்லுவார்கள். இந்த பிறர் என்பதற்கு வரம்பில்லை.

10. இது குருட்டுத்தனமான மூட நம்பிக்கையாம். இதை இக்காலத்தில் அறிவுள்ளார் அங்கீகரியார். இப்போது சாஸ்திரப் பயிற்சி அபிவிருத்தியாகிக் கொண்டு வருகிறது. அறிவிற்கும் அநுபவத்திற்கும் ஒற்றுமை இல்லாத விஷயத்தை ஜனங்கள் ஏற்றுக்கொள்ளார். சாஸ்திரோக்தமான ஆராய்ச்சியும் பரீக்ஷையும் இந்த மரண விஷயத்திலும் கூடுமன்றோ? இவ்வாராய்ச்சியைத் தற்காலத்தில், பிரஹ்மஞானசபையாரும்(The Theosophical Society) சூக்ஷ்மதத்துவ விஷய ஆராய்ச்சி சபையாரும் (The Society for Psychical research) நடத்தி வருகிறார்கள். சாஸ்திரத்தை அநுசரித்தும் பரீக்ஷைகள் நடத்தியும், அவைகளின் பயனுய் மரணத்தின் விஷயங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைத் தான் உனக்கு நான் இப்போது சொல்லப்போகிறேன்.

11. நாம் ஜீவாத்மாக்கள். பிரகிருதிலோகத்தில் வஸிக்கிறோம். அந்த லோகத்தைப்பற்றி நாம் அற்பமாகத்தான் அறிந்திருக்கிறோம். அதைப்பற்றி நாம் அறிந்த விஷயமெல்லாம் ஞானேந்திரியங்களின் மூலமாய்த்தான். அவ்விந்திரியங்களோ பூர்ணமாக விகாஸம் பெறவில்லை. குறையுள்ளவைகள். கெட்டியான பதார்த்தங்களை (Solid objects) கண் பார்க்கிறது. நெகிழ்ச்சியான (Liquids) பதார்த்தங்களையும் கண் பார்க்கிறது. ஆனல் அந்நெகிழ்ச்சியான பதார்த்தம் மிகவும் தெளிவாயும் துல்பமாயும் இருக்குமாயின் அதைக் கண் பார்க்க இயலாது. பெரும்பாலும் ஆவிகளை (Gases) கண் பார்க்க முடியாது. இப்போது நுண்ணிய ஆராய்ச்சியினுல், ஆவிகளைவிட சூக்ஷ்மமான பிரகிருதி திரவியங்கள் உள்ளன என அறிவோம்; அவைகள் நம்முடைய கண்களுக்குப் புலப்படா. அவை இந்திரியங்களுக்கு அகோசரமானவைகள்.

12. ஆயினும், அவைகளுடன் நாம் சம்பந்திக்கிறோம். அவைகளைப் பற்றிய ஆராய்ச்சி முன் பிரஸ்தாபித்த ஸூக்ஷ்ம சரீரங்களின் உதவியால் நிகழ்தல் கூடும். இச்சூக்ஷ்ம சரீரங்களில் இந்த ஸூக்ஷ்மமான பிரகிருதி திரவியங்களை அறியும் கருவி கரணங்கள் இருக்கின்றன. சாதாரணமாய் மனிதர் இந்த சூக்ஷ்ம கரணங்களை உபயோகிக்க இன்னும் தெரிந்து கொண்டார்களில்லை. ஆனல் மனி

தன் அவைகளை இனிமேல் உபயோகிக்க அறிந்துகொள்ளல் கூடும். அதினால் ஒரு நூதந சக்தி ஏற்படும். இப்போது அநேகர் அந்தச் சக்தியைப் பெற்றிருக்கிறார்கள். அத்தகையார், சாதாரணமான ஜநங்களுக்கு மறைவாயிருக்கிற அநேக விஷயங்களை நன்கு அறிவார்கள். அவர்கள் ஆராய்ச்சியில், நாம் பார்க்கும் இவ்வுலகம், நாம் நினைக்கக் கூடாதபடி அவ்வளவு விசித்திரமாகவும் அற்புதமாகவும் மஹிமையுள்ளதாகவும் இருக்கிறதென்பார். ஆயிரக் கணக்கான வருஷங்கள் மனிதர்கள் இவ்வுலகத்தில் ஜீவித்திருந்தாலும் இவ்வுலகில் எத்தனையோ மேலானவும் அழகானவுமான விஷயங்களிருந்திருப்பினும் அவைகளைப்பற்றி மனிதர்கள் ஒன்றும் தெரிந்து கொண்டார்கள் இல்லை. நான் சொல்லும் ஆராய்ச்சி முறையில் இப்போது அநேக அற்புதங்கள் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன; இனி அநேக விஷயங்களை அறியும்படியான வழியும் ஏற்பட்டுள்ளது. இவைகளைப் பற்றி பிரஹ்மஞான சபையினரால் வெளிவந்திருக்கும் புத்தகங்களில் விரிவாய்க் கண்டு கொள்ளுக. பிரகிருதத்தில் அவ்விஷயங்களில், ஒன்றைப்பற்றி மாத்திரம் நீ இப்போது தெரிந்துகொள்ள வேண்டுவது. அதாவது, மரணத்திற்குப் பிறகு ஜீவனுடைய கதி என்ன, அதன் அநுபவம் என்ன என்பதாம்.

13. மரணத்தால் உயிர் அஸ்தமநம் பெறுகின்றதில்லை. ஜீவன் இருந்துகொண்டே இருக்கிறான். அவன் தன் வாழ்வின் ஒரு படியினின்று வேறு படிக்குப் போதலே மரணம். மரணம் என்பது சிதைந்துபோன வெளி வஸ்திரத்தை (வெளிப்போர்வையைக்) கழித்து விடுதல் என்று முன்னமேயே சொல்லியிருக்கிறேன். ஜீவன் உள்போர்வையாகிய ஸூக்ஷ்ம சரீரத்தை வைத்துக்கொண்டிருக்கிறான். இது ஸூக்ஷ்மமான பிரகிருதி திரவியத்தால் அமைந்த சரீரம். ஜீவன் ஸ்தூல சரீரத்தால் பூலோகத்துடன் ஸம்பந்திக்கிறான். அஃது இன்றேல் பூலோக ஸம்பந்தப்பட்ட விஷயங்கள் ஜீவனுடைய அநுபவத்திற்கு வாரா. அவ்விதமே ஸூக்ஷ்ம சரீரமான உள் உடம்பு *புவர் லோக விஷயங்களை ஜீவன் தெரிந்து கொள்வதற்கு ஒரு ஸாதநமா யிருக்கிறது. புவர் லோகமென்பது

* வெள்ளி பொன் மேனியது ஒக்கும் வினையுடைய
உள்ளுடம்பின் ஆய ஒளி—ஔவைகுறள் இங்கு சிந்திக்கத்தக்கது.

எங்கேயோ இருக்கிற லோகமென்று நினைக்கவேண்டாம்; இந்தப் பூலோகத்திலேயே, ஓதப்புரோதமாக உள்ளது.* பூலோகத்தில் வெகு ஸூக்ஷ்மமாக உள்ள பிரகிருதி திரவியத்தைக் காட்டிலும் பன்மடங்கு நுண்ணிய பிரகிருதி திரவியத்தாலமைக்கப்பெற்றதும் பூலோகத்திலேயே ஓதப்புரோதமாகவுமுள்ளது புவர் லோகம். எத்தனையோ லோகங்கள் அல்லது அண்டங்கள் தூரத்திலும் ஸூக்ஷ்மமாகவுமிருக்கின்றன. அவைகளைப் பற்றி நான் இப்போது பிரஸ்தாபிக்கவில்லை. மரண விஷயத்தில் அவைகள் சம்பந்தப்படவில்லை. மரணமென்பது இவ்வுலகத்திலேயே ஒரு அவஸ்தையினின்று வேறொரு அவஸ்தைக்குப்போதலாம். அந்த அவஸ்தைக்குப்போகிற மனிதன் நம்முடைய கண்ணுக்குப் புலப்படுகிறானில்லை. உண்மையில் மனிதன் என்று சொல்லப்படுகிற வஸ்துவை நாம் பார்க்கிறோமில்லை. அவன் போட்டிருக்கும் வெளிப் போர்வையைத்தான் நாம் பார்க்கிறோம். மரண காலத்தில் வெளிப் போர்வையைக் கழற்றி எறிந்த மேல் உள் போர்வையாகிய ஸூக்ஷ்ம சரீரத்தை அவலம்பித்து மனிதன் நிகழ்கிறான். அந்த உட்போர்வையான சூக்ஷ்ம சரீரத்தை நம்முடைய ஊனக் கண் பார்க்கமுடியாது. ஸூக்ஷ்மமான கண் பார்க்க இயலும்.

14. இறந்துபோனவர்கள் நம்மைவிட்டுப் போகவில்லை; ஆனால் நம் அறிவின்மையால் ஜீவனானவன் நக்ஷத்திரங்களுக்கப்பாலிருக்கிற ஏதோ ஒரு லோகமாகிய ஸ்வர்க்க லோகத்திற்குப் போயிருக்கிறானென்று நினைக்கிறோம். நக்ஷத்திரலோகங்களுக்கப்பால் என்றால் எவ்வளவோ தூரமுள்ளதே. அங்கேபோதலுக்கு எந்த வண்டி அல்லது வாஹநத்தை ஜீவன் ஸ்வீகரித்துக் கொண்டான்? இம்மாதிரியாகப் புத்தியைப் புகட்டி விஷயங்களை அறியாமல் அறிவீனமாக வீண் எண்ணங்களைக் கொள்கிறோம். மரண விஷயத்தில் பிரபஞ்ச தர்ம முறைகள் உண்மையில் ஆச்சரியமுள்ளவைகள்தான். ஆனால் ஸாதாரணமானவர்களின் அறிவுக்குப் புறம்பாக இருக்கின்றன. அவைகள் யுக்திக்கும் தர்ம முறைகளுக்கும்

*பிருஹதாரண்யக உபநிஷத்து 3-ம் அத்யாயம் 6-ம் பிராஹ்மணம் கார்கியின் கேள்வியும் அதற்கு யாஞ்ஞவல்கிய மஹரிஷியின் உத்தரமும் இங்கு அறியத்தக்கவை.

விரோதமானவைக ளல்ல. வெளிப் போர்வையைக் கழற்றி நீ இருக்கும் அறையில் வைக்கும்போது நீ அங்கேதான் இருக்கிறாய். தூரத்திலுள்ள ஒரு மலைச் சிகரத்திற்கு நீ தாவுகிறாயில்லையே. வெளிப் போர்வை யில்லாமல் நீ வேறாகத் தோன்றுவாய். இம் மாதிரியாகவே—இதில் கொஞ்சமேனும் வித்தியாஸமில்லை.—ஸ்தூல சரீரத்தைக் கழற்றிய மேல் மனிதன் முன் இருந்த இடத்திலேயே இருக்கிறான். ஆனால் நீ அவனைப் பார்க்கிறாயில்லைதான். அதற்குக் காரணம் அவன் அவ்விடத்தை விட்டு வேறிடத்திற்கு ஓடிப்போய் விட்டான் என்பதல்ல. இப்போது உன் ஊனக் கண்ணுக்குப் புலப்படாத உள் போர்வையை மாத்திரம் அணிந்து கொண்டிருக்கிறான்.

15. பிரபஞ்சத்தில் சில பாகத்தை மாத்திரம் நம்முடைய கண்கள் பார்க்கின்றன. கண்ணின் பார்க்கும் சக்திக்குப் புறம்பாக எத்தனையோ நுண்ணிய சலநங்கள், கம்பநங்கள் இருக்கின்றன. மரணத்திற்குப் பிற்பாடு ஜீவன் அணிந்திருக்கும் உட்போர்வையாகிய உள்ளுடம்பு உன்னுடைய கண்ணுக்குப் புலப்படாத நுண்ணிய பிரகிருதி திரவியத்தா லமையப்பெற்றுள்ளது.

16. பூலோகத்திலுள்ள விஷயங்களை ஸ்தூல சரீரத்தின் ஸாதநத்தால் பார்க்கிறாய், ஸ்பரிசிக்கிறாய், முகருகிறாய், கேட்கிறாய், ருசிக்கிறாய். அவ்விதமே, புவர்லோக சம்பந்தப்பட்ட விஷயங்களை முகரலாம் ஸ்பரிசிக்கலாம். உண்மையில் புவர்லோகம் என்பது பிருதக்கான வேறுலோகம் அன்று; அஃது இந்த லோகத்தின் ஸூக்ஷ்மமான பாகம். எத்தனையோ அண்டங்களிருக்கின்றனவென்று முன் சொன்னேன். அவைகளைப்பற்றி இப்பொழுது நான் பிரஸ்தாபிக்க வில்லை. உன்னைவிட்டுப் பிரிந்து போன ஸ்நேஹிதன் உண்மையில் உன்னுடனேயே யிருக்கிறான். நீ ஸ்தூல சரீரத்தையும் உடையவனாயிருக்கிறாய். அவன் ஸூக்ஷ்ம சரீரத்தை மாத்திரம் உடையவனாயிருக்கிறான். அதனால் அவனை நீ பார்க்கிறாயில்லை. அதனால் அவனை நீ உணர்கிறாயில்லை. நீ தூங்கும் காலத்தில் ஸ்தூல சரீரத்தைவிட்டு ஸூக்ஷ்ம சரீரத்தை அவலம்பித்துக் கொண்டு வெளியேறுகிறாய்; அப்போது பூர்ண பிரக்ஞையுடனே இறந்துபோன உன் ஸ்நேஹிதனை நீ பார்க்கிறாய். மரணத்துக்கு முன் எப்படி நீ அவனுடன் நடைபெற்றாயோ அப்படியே இப்போதும் அதாவது நீ தூங்கும்

போதும் அவனுடன் நடை பெறுகிருய். ஆகவே உன் ஸ்நேஹிதனுடன் தூங்குங் காலத்தில் ஸந்தோஷமாயிருக்கிருய். விழிப்புக் கொண்டகாலத்தில் அவனை விட்டுப் பிரிந்ததாக நீ நினைப்புக் கொள்கிருய்.'

17. நம்மில் பெரும்பான்மையோருக்கு ஸ்தூல சரீரத்துடனிருக்கும் காலத்திலுள்ள பிரக்ஞையும் ஸூக்ஷ்ம சரீரத்துடன் மாத்திரம் இருக்கும் காலத்திலுள்ள பிரக்ஞையும் தொடர்பாயிராமல், இடைவெளி ஏற்படுகிறது. அதனுல் தூங்குங் காலத்தில் நாம் அநுபவிக்கும்விஷயங்கள் ஜாக்ரதவஸ்தையில் ஸ்மரணைக்கு வருகின்றனவல்ல. இந்தத் தொடர்பு அருமல் பூர்ண ஸ்மரணை நிகழுமாயின் மரண மென்பது இல்லை. ஜாக்ரதவஸ்தையில் ஸ்தூல சரீரத்துட னநுபவிக்கிற விஷயங்களின் நினைவு ஸுஷுப்தியில் ஸூக்ஷ்ம சரீரத்துடன் ஜீவன் நடைபெறுங்காலத்தில் இருக்கின்றது. அந்த ஸ்மரணை அற்றுப் போகவில்லை. தூங்குங் காலத்தில் அநுபவிக்கும் விஷயங்களின் ஸ்மரணை அறுபடாமல் விழிப்புக் காலத்தில் பிரக்ஞையுடன் தொடர்பாய்ச் சிலருக்குத்தானிருக்கின்றது. காலக்கிரமத்தில் கொஞ்சங் கொஞ்சமாய் இத்தகைமையை எல்லாரும் பெறலாம். இவ்விதமாய் விகாஸமுறையில் ஜீவாத்மாவின் சக்திகள் மேன்மேலும் மலரும். அநேகருக்கு இத்தன்மையான சக்தி இப்போது மலர ஆரம்பித்திருக்கிறது. அதனுல் தூங்குங் காலத்தில் அநுபவித்த விஷயங்களின் ஸ்மரணையின் சின்னங்கள் விழிப்புக்காலத்தில் தோன்றுகின்றன. அவைகளின் உண்மையை அறியாமையால் அவைகளை வெறும் ஸ்வப்நங்க ளென்றும் அதனுல் உபயோகமற்றவைகளென்றும் நாம் மதிக்கிறோம். இப்போது சிலருக்கு மாத்திரம் தூங்குங்காலத்தில் அநுபவிக்கும் விஷயங்களின் பூர்ண ஸ்மரணையிருக்கிறது, மற்றவர்களுக்குப் பூர்ண ஸ்மரணையில்லாமற் போனுலும், இறந்தவர்களைக் கண்ணுல் நேரில் பார்க்கமுடியாமற் போனுலும், அவர்கள் தம்முடனிருப்பதாக ஒரு ஸ்தூலமான உணர்வு இருக்கிறது. பின்னும் சிலருக்கு ஸுஷுப்தி அவஸ்தையின் அநுபவங்களின் ஸ்மரணை வியக்தமாய் இல்லாமற்போனுலும் சுகமாய்த் தூங்கினேன் என்ற ஸ்மரணையுடன் விழிப்பார்கள். இது மேலான லோகமாகிய புவர்லோகத்தில் தான் அநுபவித்த சுகிர்தங்களின் பயனென நினைக்கவேண்டும்.

18. இது (பூமி) கீழான லோகம். அது (புவர்லோகம்) மேலான லோகம். முன்னது பின்னதில் அடக்கம். இந்த லோகத்தினின்று தூங்கும் காலத்தில் புவர் லோகத்துக்குப் போகும்போது, ஸ்தூலசரீரமான கீழான உடல் தடையாயிருக்கின்றதை அறிவாய். அதனால் அதை விட்டுப் போகிறதுபோல நினைப்பாய். மறுபடியும் தூங்கி விழிக்கும் காலத்தில், இந்தக் கீழான சரீரத்தைத் திரும்பவும் ஸ்வீகரிப்பாய். அப்போது, முன் தூக்கத்தின் அநுபவங்களை ஒரு மேகம் மறைத்தாற் போல இந்த ஸ்தூல உடல் மறைக்கும். அவ்வநுபவங்களை மறப்பாய். இறந்து போன உன் ஸ்நேஹிதனுக்கு ஏதாவது ஒரு விஷயத்தைத் தெரிவிக்க வேண்டுமாயின் நீ தூங்க ஆரம்பிக்கு முன் அவ்விஷயத்தை உன் மநத்தில் வியக்தமாய் சிந்தித்து அவ்விஷயத்தை உன் ஸ்நேஹிதனுக்கு அறிவிக்கவேண்டுமெனத் தீர்மானம் கொள்ளு. நீ உறங்குங் காலத்தில் அவனை ஸந்திப்பாய். நீ சிந்தித்த விஷயத்தை அவனிடத்தில் தெரிவிப்பாய். இது நிச்சயமானது. இவ்விதமே யாதேனும் ஒரு விஷயத்தைப் பற்றி அவனுடன் ஆலோசிக்க வேண்டுமென நினைப்பாய். அப்படி ஆலோசனை கேட்பாய். அவனும் ஆலோசனை புரிவான். ஆனால் ஜாக்ரதவஸ்தையில் இருக்கிற பிரக்ஞை ஸுஷுப்தி அவஸ்தையிலிருக்கிற பிரக்ஞையுடன் தொடர்பில்லாமல் இடைவெளியுள்ளமையா யிருக்கின்றமையாலும் அவ்விடைவெளியைத் தாண்டும்படியான பழக்கத்தை நீ பெறுமையால் அவன் சொல்லுகிற விஷயம் உன் ஸ்மரணைக்கு ஜாக்ரதவஸ்தையில் வருகிறதில்லை. அப்படி வியக்தமாக அவன் சொன்ன விஷயம் உன் ஸ்மரணைக்கு வராவிடினும், பொதுப்படையாய் அவன் அபிப்பிராயம் இத்தன்மையாயிருக்கின்றது என்ற நினைப்புடன் விழிப்பாய். உன் அநுபவத்தில் அது சரியாகவே யிருக்கும். இப்போது நான் ஒன்று உனக்கு எச்சரிக்க வேண்டும். இவ்வுலக சம்பந்தத்தைப் பற்றி இறந்தவர்களிடம் ஆலோசித்தல் நலமன்று. அவர்களுக்கு அது தீமை பயக்கும். இவ்வுலகத்தின் விஷயங்களினின்று விலகி மேலுலகத்தில் நடைபெறுகின்றவர்களுக்கு இவ்வுலக சம்பந்தப்பட்ட விசாரணை அவ்வுலக நிகழ்ச்சியில் பாதகமாயிருக்கும். (இன்னும் வரும்.)

ப. நா.

129

1. அகண்ட பரிபூர்ண சச்சிதானந்த சிவமானது சர்வ ஜீவராசிகளுடைய, சாமான்ய கர்மம் என்னும் வியாஜத்தால், சிருஷ்டியாதி தொழிலை நடாத்தும் இப்பிரபஞ்சத்தில் கர்மத்தினால் நாம் சரீரம் அதன் உற்பத்தி முதலிய ஷட்பாவ விகாரத்தையடைந்து அதினாலுண்டாம் கர்மவசத்தராகி சுகதுக்கங்களில் அடிபட்டு ஓயாமல் ஜநந மரண சக்கரத்தில் சுழன்று சுழன்று மீட்டும் மீட்டும் கர்மத்தையே பெருக்கி அதினின்றும் மீட்சிபெற வகை தெரியாதவர்களாய் துக்க நிவிர்த்தியில் மாத்திரம் இச்சையுடையவர்களாக இருக்கிறோம். ஒன்றன் சொரூபம் தெரிந்து அதை நீக்க முயன்றால் பிரயோசநம் அடையலாம்; ஆதலால் துக்கமானது கர்ம ரூபம் என்பதையும் அந்தக் கர்மத்தின் ஹேது சொரூபம் பாகுபாடு ஆசிரயம் அவ்தி நிவர்த்தியுபாயம் பலன் இவைகளைப்பற்றி இங்கே சுருக்கமாய் எழுதுவோம்.

I. கர்ம சோரூப வர்ணனை.

2. கர்மம் என்றால் செய்கை, கிரியை, தொழில் எனப் பொருள்படும். இது மநம், வாக்கு, காயம் இவைகளை ஆதாரமாய்க் கொண்டு உண்டாகும் ஓர் சலந ரூப வியாபாரம். வாக்கு, காயம் இவைகள் மநமின்றித் தொழில் செய்ய இயலாவிடினும், மநத்தினிடம் உதித்த ஓர் இச்சாரூபசலநம் பின் வாக்கினிடமாவது, சரீரத்தினிடமாவது வந்து காரியப்படுகிறபடியால் மநத்துடனே வாக்குக் காயங்களும் சேர்க்கப்பட்டன. ஆகவே மநம், வாக்கு, காயங்களிடத்து நிகழும் சலநவடிவமே கர்மம்என்ன இலக்ஷணத்தை யடைந்து அதுவும் அநேக பேதமாயிருப்பினும் இங்கே ஜநந மரண துக்கஹேதுவான கர்மம் எடுத்துக்கொண்டபடியால் (கர்த்திருத்துவ) நானே செய்கிறேன் (போக்திருத்துவ) நானே அநுபவிக்கிறேன் என்ற இச்சா விர்த்தி பூர்வகமாய் எந்தெந்த சலந வடிவ கர்மம் நிகழ்கின்றதோ, அவைகள் எல்லாம் துக்கஹேதுவாயிருத்தலால் கர்மம் என்று சொல்லப்படும். ஆகவே கர்த்திருத்துவ, போக்திருத்துவ ஞாநத்துடன் எனக் கூறியதால் அவ்வித ஞாநமின்றிய சிசுக்கள், மகாத்மாக்கள், பசு, பக்ஷிபாதிகள் இவைகளிடத்தும் மநம், வாக்கு, காயபூர்வகமாய்

கிரியை நிகழினும் அவைகள் இங்கு கூறிய கர்மப்பகுப்பில் சேர்ந்தவை யல்ல வென்பதும் குறிக்கப்பட்டது. ஏன் எனில், ஸம்ஸார ஸாகரத்தில் சுக, துக்கம் என்னும் அலையால் அடிபட்டுக் கொண்டு அதினின்றும் கரை யேற வழிதெரியாமல் திகைத்துக்கொண்டிருப்பவர்களை நோக்கி இங்கே ஆரம்பம் செய்கிறபடியால், அத்தகையோர் அதினின்றும் கரை யேறிக்கொள்ள அவ்வித ஸம்ஸார காரணமானது கர்மம் என்பது முதலில் பிரமாண பூர்வமாய்க் காட்டப்படுகிறது.

> "வேதாவை யிவ்வண்ணம் விதித்ததே தென்னில் உன்
> வினைப்பகுதி யென்பன்.........."

என நம்பிரான் தாயுமானஸ்வாமிகள் கூறிப்போந்தமைகாண்க.

3. மேற்கூறப்பட்டுள்ள "கர்ம" சப்த அர்த்தத்தில் கர்மம் என்றால் செய்கை என்று குறிப்பிட்டபடி அது உண்டாகும்போதே செய்தல் வடிவமாய் உற்பத்தியாகியும், அதுவும் ஹிதம் அஹிதம், அல்லது நன்மை தீமை, அல்லது புண்ணியம் பாபம் என இரு வித பாகுபாட்டை அடைகிறது. அதாவது ஒருமனிதனிடம் கர்த்திருத்துவ போக்திருத்துவ சகிதமாய் திரிகரணங்களிடத்து ஓர் கிரியை ஏற்படுமாயின் அப்பேர்ப்பட்ட சலந வடிவ கிரியை தன்னைப் பற்றியாவது, பிறரைப் பற்றியாவது நன்மை, தீமை யென்ற எதாவது ஒரு பாகுபாட்டில் சம்பந்தமடைந்தே நிகழ்கிறது. அதில் நன்மையானது தன்னைப் பற்றியும், பிறரைப் பற்றியுமாகிச் செய்வதாகவே கர்த்தா குறிப்பிட்டிருப்பினும், தீயவைகள் எல்லாம் பிறருக்கு என்றே குறிப்பிட்டு செய்யப்படுகிறது என்பது பிரத்தியக்ஷ அநுபவமே. ஏன் எனில், ஒருவன் தனக்குத் தானே தீங்குசெய்ய விரும்புதல் இல்லை. ஆகையால் கர்த்தாவுக்கு அவ்வித எண்ணம் உண்டாகிறது. ஆயினும் மேற்கண்ட செய்கை நல்லதாயினும் தீயதாயினும் ஆகுக. தனக்கென்று செய்யப்படினும், பிறர்க்கென்று செய்யப்படினும் அது தன்னிடத்தில் வந்தே முடிவையடைகிறது. அதாவது சுகம், துக்கம் என்னும் வடிவாய் வந்து பொருந்துகிறது. அது ஈதுபோலெனில், தண்ணீர் நிறைந்த ஓர் பெரிய தொட்டியின் மத்தியில் கிளம்பிய குமிழியானது விருத்தாகார அலை

வடிவாய் வெளிப்பட்டு கரையினின்றும் திரும்பவும் மோதப்பட்டு மறுபடியும் எந்த இடத்தில் உற்பத்தியானதோ அதே இடத்தில் வந்து முடிவுறுவது போல் பிரபஞ்சம் என்னும் கால சக்கரத்தின் மத்தியிலுள்ள அந்தக்கரணப் பிரதேசத்தில் கிளம்பிய குமிழியென்னும் நன்மை, தீமை ரூப விர்த்தியானது மறுபடியும் உதித்த இடத்திலேயே வந்து சாருமென்றறிக. ஆனால் தீச்செயல்களைப் பிறர்க்குச் செய்தோம் என்ற நினைப்பே யொழிய அந்தத் தீய எண்ணம் கடை முறையில் தனக்கே பலனாக வந்து முடியும். அதுபற்றியே,

> "பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் றமக்கின்னா
> பிற்பகல் தாமே வரும்" என நாயனார் கூறியுள்ளார்.

4. ஆனால் ஹிதம், அஹிதம் எனவும், அதின் பலன் சுகம், துக்கம் எனவும், பின்ன அர்த்தமுடைய எதிர்ப் பதமாக வியவகரிக்கப் படின் ஹிதம் சுக ரூபமாயும், அஹிதம் துக்க ரூபமாயுமே இருக்கிறது. அதாவது ஒரு கர்மமே செய்யும்போது புண்ணியம் அல்லது பாபமாகவும், காலாந்தரத்தில் அநுபவத்திற்கு வரும்போது சுகம் அல்லது துக்கம் எனவும் பெயர் பெறுகிறது. எப்படியெனில், சுகமானது சத்துவகுண ஆதிக்யத்தும், துக்கமானது ரஜஸ் தமோ குண ஆதிக்யத்தினிடத்தும் அநுபவிக்கப்படுவது பிரஸித்தம். அப்படியே ஹிதத்தைச் செய்ய வேண்டுமானால் சத்துவகுண ஆதிக்யனாகவும், அஹிதத்தைச் செய்யவேண்டுமானால் ரஜஸ் தமோகுண ஆதிக்யனாகவும் வந்தவிடத்தே அவை நிகழ்கின்றன. ஆனால் செய்யும்போது பிரவிர்த்தி ரூபமா யிருப்பதால் பராக் (வெளிமுகம்) ஆயும், அநுபவிக்கும்போது பிரவிர்த்தி ரூபசூலம் தன்னில் வந்தடங்கி நிவிர்த்தி ரூபத்தைப் பெறுவதால் அந்தர் (அகமுகம்) ஆகவும் ஆகிறான். ஆகையினாலே தான் ஹிதத்தைச் செய்யும்போது சத்துவகுண ஆதிக்யனா யிருப்பினும் பராக்கினால் அப்போது சுகத் தோற்றமின்மையும், பின் சுகத் தோற்றமும்; அப்படியே அஹிதத்தைச் செய்யும்போதும் ரஜஸ் தமோகுண ஆதிக்யனாயிருப்பினும் பராக்கினால் அப்போது துக்க வுணர்ச்சி யின்மையும், பின் துக்க அநுபவமும் பெறப்படுகின்றன. இவ்விதம் ஹித ரூப சுகத்தையும், அஹித ரூப துக்கத்தையும் வேறுபடுத்தி யறியாமையால் "எவ்விதமோ எனக்கு இந்தத் துக்கம் வந்து சேர்ந்துவிட்டது" என்று

உலகினர் பிரலாபிக்கிறார்கள். அப்படி யிருப்பினும் ஹிதம் சுக ரூபமே, அஹிதம் துக்க ரூபமே. எதுபோல் எனில், ஓர் யுத்தவீரன் யுத்தாவேசனாய் பராமுகமாய் யுத்தம் செய்யுங்காலத்து தன் சரீரத்தில் பட்ட காயத்தால் அப்போது துக்க வுணர்ச்சி யில்லாதவனாய்ப் பின் சரீர தாதான்மியம் (ஒற்றுமை உணர்வு) வரும்போது துக்க வுணர்வைப் பெறினும் எப்படி முன்னமேயே அந்தத் துக்கம் அடையப்பட்டிருந்ததோ அதுபோல் ஹிதா ஹிதங்கள் செய்யும் போது சுகதுக்க ரூபமாய் அநுபவிக்கப்படா விடினும் அவை சுக துக்கரூபமே என்பதில் சந்தேகமில்லை.

II. கர்மபரிபக்குவத்தின் விசாரம்.

5. இனிஇக்கர்மம் பரிபக்குவமடைந்து பலனுக்கு வரக்கூடிய கால வரையறையைக் கவனிக்கும்போது இந்தக் கர்மங்களை விதைகளுக்குச் சமானமாக ஒப்பிடலாம். எப்படி யெனில், வெளிப் பார்வையில் பீஜம் போலத் தோற்றியும் பீஜ சக்தியில்லாத போலி பீஜம் போலுள்ளன மேற் கூறப்பட்டுள்ள சிசு மஹாத்துமாக்கள் இவர்களிடத்து நிகழும் திரிகரணங்களின் கிரியாவிசேஷமான கர்மங்கள். ஆனல் பீஜ சக்தி முளைக்குந்தன்மை நிறைந்துள்ள விதை போன்றது கர்த்திருத்துவ சகித அஞ்ஞர்களிடம் உண்டாகும் திரிகரணங்களின் கிரியா விசேஷமான கர்மம் எனவுமறிக. இன்னும் பீஜங்களில் அந்தந்தப் பீஜங்கட்குத் தக்கதாக பலனளிக்கும் காலவரையறை போல் கர்மங்களிலும் ஒரு நிமிஷ முதல் அநந்த கல்பம் வரை பலனளிக்கும் சுபாவம் உளதாகவும் அறியவேண்டியது. அவ்விதம் கால வரையறை இருப்பினும், ஒரு தோட்டக்காரனுடைய கவலைக் குறைவினல் குறிப்பிட்ட காலத்தில் பலன் கொடாமல் கால வரையறையைத் தாண்டச்செய்யவும், ஒட்டுமாக்கட்டுதல் முதலிய விசேஷயுக்திகளால் சீக்கிர பலனை அடையச் செய்யவும், ஒருவித ஜாதி மரத்தில் அதன் விஜாதீயமான (வேறு ஜாதியான) மரம் முளைக்கச் செய்து இரண்டு பலன்களையும் அடையும்படி செய்யவும், பீஜத்தை (வித்தை) அக்கினியிலிட்டு வெதுப்பலால் பின் பலனுக்கு வராமல் போகச்செய்தலுமாகிய தன்மைபோல், நம்மால் செய்யப்பட்ட கர்மங்களையும் வெகுகாலத்துக்குப் பின்பலனுக்குக் கொண்டுவரவும், சீக்கிர பலனுக்குக் கொண்டு வரவும், ஒன்றற்கொன்று விஜாதீய போகங்களை

உண்டுபண்ணிக் கொள்ளவும், பலனுக்கு வராமலே போகச் செய்யவும் கூடும் என அறிக. இதைப் பின்னர் விஸ்தரிப்போம். ஏனெனில், கர்மம் ஜடமானதாலும், அவ்வித கர்மங்களை ஈசுவரன் பரிபக்குவத்துக் கேற்ப பலனுக்குக் கொண்டுவருகிறபடியாலும், அவ்வித பரிபக்குவமும் ஜீவர்களுடைய பிரார்த்தநா ரூபமாயிருப்பதாலும், ஜீவர்களுடைய பிரார்த்தனை தங்களுக்கு இஷ்டமோ அநிஷ்டமோ அதைக் கவனியாது அவர்கள் பிரார்த்தனைப்படி ஈசுவரன் அநுக்கிரகிப்போனதலாலும், கால தேசங்கட்குத் தக்கபடி தான் பயிரிட்ட சொற்பப்பயிரை அழித்து ஜாஸ்திபலன் கொடுக்கக்கூடிய பயிரை இடவேண்டுமானாலும், ஜாஸ்தி பலன் கொடுக்கும் பயிரை அழித்து சொற்ப பலன் கொடுக்கும்படியாகச் செய்துகொள்ள வேண்டுமானாலும் நில சுவான்தாரனுக்கு (விதைத்தவனுக்கு) எப்படி அதிகாரமோ அப்படிப் போல் ஜீவர்களின் பிரார்த்தனைப்படி கர்மபலனையும் அடைதல் கூடும் என்று அறிக.

6. அப்படியானால் பிரார்த்தனையின் சொரூபம் யாது எனயோசிக்கில், விவேகத்தினாலோ அவிவேகத்தினாலோ, உத்தேசத்தோடு கூடியோ, உத்தேசமின்றியோ, அழுத்தமாய்த் திரும்பத்திரும்பச் செய்கிற தீவிர அநுஸந்தாந (நினைத்தல்) வடிவமாயிருக்கிறது. எப்படி யெனில், ஒருவன் காசியாத்திரை செல்ல உத்தேசிப்பானகில் ஒரு காலத்தில் சாமான்ய நினைப்பு மாதிரியாயிருந்து பிறகு அடிக்கடி நினைப்புக்கு வந்து மறுபடியும் எப்போது தீவிர நினைப்பை உண்டுபண்ணிக் கொள்ளுகிறானோ அப்பொழுது நினைத்த அந்தக் கர்மமானது முற்றுப்பெறுகிறதென்பது அநுபவம். அப்படியே ஒவ்வொரு நல்ல தீய விஷயங்களிலும் அநுபவித்துப் பார்க்க. அதெப்படி யெனில், ஒருவன் ஒரு மூர்த்தியைச் சுமார் 10 வருஷகாலமாய்த் தியானித்து வருகிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் ஒரு நாளாவது அதின் அவதியைப் பெறும விருக்கவும், ஆனால் அவனே அதிரூப லாவண்ய முள்ள எப்பொழுதும் பார்த்திராத ஓர் வஸ்துவை பகலில் சற்று நேரம் பார்த்திருந்து இச்சை கொண்டிருப்பானாயின் அதே வஸ்துவை அன்றிரவிலேயே சொப்பனத்தில் அநுபவித்துவிடவும் கூடும். இதில் ஸகுணத்தியானமும், பிரியவஸ்துவின் நினைப்பும் இரண்டும் நினைவு வடிவாக அநுஸந்தா

நம் செய்யப்படினும் பிரிய வஸ்துவின் காங்க்ஷை ஜன்ம ஜன்மமாய்ப் பழகிவந்து நீடித்த வாஸனையானதால் அழுத்தமான அநுஸந்தாநமும் அதில் தீவிரத்தன்மையும் உண்டாயிற்று. மூர்த்தியானமோ அப்படியன்று. ஆனபடியால் அதின் அவதியைப் பெறுவது துர்லபமாயிற்று. ஆகவே ஒரு கர்மத்தின் பலனுக்குக்காரணம் அதன் தீவிர அநுஸந்தாநமாதலால் அவ்வித மநத்தின் நினைப்பையே இங்கு பிரார்த்தனை என்னப்பட்டது.

III. இனி இவற்றின் பாகுபாட்டின் விசாரம்.

7. இவ்விதமான கர்மங்கள் புண்ணியம், பாபம், மிசிரம் என்ற சொரூபமாய் கிளம்பி ஆகாமியம், ஸஞ்சிதம், பிராரப்தம் என்ற பெயர்களை அவஸ்தாபேதத்தால் (காலபேதத்தால்) பெறுகின்றன.

புண்ணியமாவது தன் பொருட்டாவது பிறர் பொருட்டாவது செய்யக்கூடியதாயும், தனக்காவது பிறருக்காவது துன்பத்தைவிளைவிக்காததாயும் உள்ள கர்மங்களாம்.

பாபமாவது சுயநயம் கருதி பிறரை உத்தேசித்தே பிறருக்குச் சம்மதமில்லாததாயும் துன்பம் விளைவிக்கக் கூடியதாயுமுள்ள கர்மங்களாம்.

மிசிரமாவது ஒருவகையாகப் பார்க்கில் ஹிதமாயும், மற்றொரு வகையாகப் பார்க்கில் அஹிதமாயும் கலந்துள்ள செய்கைகளாம்.

இவை மூன்றும் திரிகாணங்களுடன் சம்பந்தப்படவே அவைகளை உத்தேசித்து 3 × 3 = 9 விதமாகும். அவைகள் எளிதாகப் புலப்படக் கூடியனவாதலால் அவற்றை நிறுத்தி பின்னவற்றை மட்டும் விசாரிப்போமாக.

IV. மூவகைக் கர்மங்களின் லக்ஷணவர்ணனையும் ஆகாமிய கர்ம விசாரமும்,

8. இனி ஆகாமிய கர்மம் என்றால் தற்காலத்திய கர்மம், தற்காலத்தில் செய்யப்படும் கர்மம் எனக் கொள்க. இது மநம், வாக்கு, காயங்களிடத்து நிகழும் செய்கை வடிவமாயிருக்கிறது. இதன் லக்ஷணமாவது:—கர்த்திருத்துவ சகிதமாய் வர்த்தமான க்ஷணத்தில் செய்யப்பட்டதாய், தீவிரமாயிருந்தால் செய்த 3-வது க்ஷணத்தில் பலனுக்கு வரக்கூடியதாய், செய்தல் வடிவமாயுள்ளது

ஆகாமியம் என இலக்ஷியத்தை உணர்ந்தவர் இலக்ஷணம் கூறுவர். இவ்விலக்கணம் இவ்விதம் கூறியது யாதுபற்றி யெனில், கர்த்திருத்துவ புத்தியின்றிச் சிசுக்கள் மகாத்துமாக்கள் இவர்களால் செய்யப்பட்ட கர்மம் ஆகாமியம் அல்லவென்பதற்காக "கர்த்திருத்துவ சகித" என்றும், முன்செய்த அல்லது இனிமேல் அநுபவிக்கப் போகிற கர்மங்கள் ஸஞ்சிதம், பிராரப்தம் என வேறுபடுத்திக் காட்ட வேண்டி "வர்த்தமான" என்றும், வர்த்தமான ஜன்மத்திலும் இதற்கு முன்னும் செய்தது சஞ்சிதமாதலால் "க்ஷணம்" என்றும், ஆகாமியமே ஸஞ்சித பிராரப்தம் என்ற பெயரடைவதால் 2-வது க்ஷணத்தில் சஞ்சிதம் எனவும், தீவிரமாயின் 3-வது க்ஷண முதல் பலனுக்கு வருவதால் "தீவிரமாயிருந்தால் 3-வது க்ஷணத்தில் பலனுக்கு வரக்கூடிய" என்றும், இதுவே ஓர் காலத்து போக வடிவமாக வருகிறபடியால் இதை "செய்தல்" வடிவம் என்றும் இவ்விதம் அதிவியாப்தியாதி லக்ஷண தோஷங்களை நீக்கிக் கூறப்பட்டது.

(9) இங்கு ஆகாமிய மெல்லாம் பிராரப்த மென்று சொல்லும் மந்தமதியினரை உத்தேசித்து கிழே கண்ட பாகுபாடுகள் பிரிக்கப்படுகின்றன. அநுபவத்தில் கண்டு கொள்க. இவ்வித ஆகாமியம் எத்தனை வகைப்படும் எனில், (1) விவேகா விவேக பூர்வக ஆகாமியம், (2) வாஸனுதிக்ய ஆகாமியம், (3) பிராரப்தாநுசார ஆகாமியம் என மூன்று வகைப்படும்.

(1) திரிகரணங்களில் புண்ணிய அல்லது பாபச்செய்கை நிகழ வேண்டுமானல் முதலில் புருஷனுடைய விவேக அவிவேக பூர்வகமாகவே உண்டாகிறபடியால் அத்தகைய செய்கை விவேகா விவேக பூர்வக ஆகாமியம் எனப்பட்டது.

(2) அவ்வித செய்கை க்ஷணபங்குரம் (க்ஷணத்தில் நாசமடைவது) ஆதலால் அடுத்த க்ஷணத்தில் வாஸனா ரூபமாயும் ஸஞ்சிதம் என்றும் பெயர் பெறுகிறபடியால் அவ்வித கர்மம் பலனுக்கு வரவேண்டு மென்றால் வாஸனா (முன்பின் ஒன்றையும் ஆலோசியாமல் திடீரென்று உண்டாகும் காமக் குரோதாதி விர்த்தி) ரூபமாய் அடங்கி யிருந்து பின் எழுச்சியை யடையும்போது அநுஸந்தான விசேஷத்தால் தீவிரப்படவேண்டிய படியால் அவ்விதம் இடை

இடையே கிளம்பி இப்போது பலன் ஒன்று மில்லாமல் பின் பிரா ரப்த ரூபமாய் மாறும் ஆற்றலோடு கூடிய ஆகாமியத்தை (செய் கையை) வாஸநாதிக்ய ஆகாமியம் எனக் கூறப்படும்.

(3) அவ்விதம் வாஸநாரூபமாயிருந்த அந்தக் கர்மம் பல ரூப போகத்துக்கு வரவேண்டும் என்றால் ஏதாவது ஒரு ஆகாமியத்தை முன்னிட்டே வரவேண்டுமாதலால் அத்தகைய ஆகாமியத்தை பிரா ரப்தாநுஸார ஆகாமியம் எனக் கூறப்பட்டது.

10. இதில் முதலாவதான ஆகாமியம் உண்டாகும்போதே விவேகியாயின் பாபத்தை நீக்கி புண்ணியத்தையே செய்தும் அப் புண்ணிய விசேஷத்தால் பரிபக்குவ அநந்தரம் ஞானத்தை அடை ந்து அதனால் அநந்தகோடி ஜன்மங்களில் செய்துள்ளதான ஸஞ்சி தாதி கர்மங்களை வெல்லலாம். (எரித்து விடலாம்.) பின்வரும் ஆசி ரய விசாரணையால் அறிக.

11. இன்னும் அதுவும் தவறின் வாசநாதிக்ய ஆகாமியம் கிளம் பும் போதாவது முற்கூறியபடி விவேகியாயின் நல்விவேகத்தால் வாஸனைமூலமாய்ப் பகுத்தறிந்து புண்ணிய ரூபமாயின் விசேஷ அநு ஸந்தானத்தாலும், பாபரூபமாயின் அநுஸந்தானத்திற்குக் கொண்டு வராதிருத்தல் பூர்வகமாய் முறையே நாள் சென்றுவது பலனுக்கு வராமலேயாவது உள்ள கதியை சம்பாதித்து பரிபக்குவ விசேஷத் தால் ஞானாநந்தரம் சஞ்சிதாதி கர்மங்களை எரித்து அநுகூலம் பெறலாம். மூன்றுவதான பிராரப்தாநுசார ஆகாமியத்தை காரிய முன்னிலையாக அதாவது பிராரப்தபோகத்தின் பின் இன்ன போக த்தினிமித்தம் நம்மை இவ்விதம் பிரவிர்த்திக்கச்செய்தது என்றோ, அல்லது யோக மகிமையினால் முன்னுடியோ அறியவேண்டும். அவ் விதம் யோகமகிமையினால் முன்னமேயே அறிந்துகொண்டால் இந்த ஆகாமியம் உற்பத்தியாவதுமோ அல்லது அதற்கு முன்பாகவோ அதைவிட பிரபலமான வேறு கிரியையால் வரும் பிராரப்தத்தை நிவிர்த்திபண்ணிக் கொள்ளலாம். திருஷ்டாந்தமாக பிராரப்தம் இன் னது என்று முன்னமேயேதெரிந்து அதை வெல்லுவதற்காகவேறு கர்மத்தால் மார்க்கண்டேயர் வென்றதைப்போலும் என அறிக.

(இன்னும் வரும்.)

இசக்கியரடும்பெருமாள் பிள்ளை.

ஆர்யர்களின் பூர்வ நாகரிகம்.

ஆர்யர்களின் பூர்வ சரித்திரங்களை ஆராய்ச்சி செய்துவரும் மேற்கு தேச வித்வான்கள், அவர்களின் உத்பத்தியைப் பற்றி இரு வித ஸித்தாந்தங்கள் கூறுகின்றனர்:—

அவையாவன:—

(1) "இந்திய ஆர்யர்கள் ஐரோப்பிய ஆர்யர்களுடன் ஸஜாதீயர்கள்"

(2) "இந்திய ஆர்யர்களும், ஐரோப்பிய ஆர்யர்களைப்போல, பூர்வஜன்ம பூமியான மத்ய ஆசியாவின் பீடபூமியான ஆக்ஸஸ் நதி தீரங்களினின்றும், பிரிந்து, தென்கிழக்காய்ச் சென்று, வடமேற்கு ப்ரதேசங்கள் வழியாய் இந்தியாவில் ப்ரவேசித்து, முதல் முதல் பஞ்சாப் தேசத்தில் குடியேறி யிருக்கவேண்டும். அவர்கள் வரும் வழியில், இரானியர் என்ற ஓர் ஜாதியார் பிரிந்து பாரஸீகத்தில் தங்கிவிட்டார்கள். இந்திய ஆர்யர்கள், மேற்கூறியவாறு வெளி தேசங்களினின்றும் இந்தியாவுக்குப் புதிதாய் வந்தவர்களேயொழிய இந்தியாவின் பூர்வ குடிகள் அல்லர்." மேற்கூறிய ஸித்தாந்தங்களை நிரூபிக்க அவர்கள் கூறும் ஆதாரங்களில், முக்கியமானவை:—

(1) பாஷாஸாம்யம் (Affinity of language.)

(2) சரீரஸாம்யம் (Common features.)

(3) புராணஸாம்யம் (Common mythologies.)

(1) பாஷாஸாம்யம் (பாஷைகளின் ஒற்றுமை.)

ஹிந்துக்களின் வேத பாஷையையும், இரேனியரின் "அவஸ்தா" பாஷையையும், க்ரீக், லத்தீன், கெல்டிக் முதலான பாஷைகளையும் ஆராய்ச்சிசெய்தால், முக்கியமான அநேக பதங்கள் ஒரே தாதுக்க (Roots) ளிலிருந்து வந்திருக்கவேண்டுமென்று தோன்றுகின்றன. ஆதலால், இப்பொழுது, இப்பாஷைகளையும், இப்பாஷைகளிலிருந்து உண்டான (Derivative) பாஷைகளையும் பேசும் ஜாதியாரின் முன்னோர்கள் முன்னொருகாலத்தில், இப்பாஷைகளுக் கெல்லாம் தாய்ப் பாஷையான ஓர் பூர்வ பாஷையைப் பேசிக்கொண்டிருந்திருக்க வேண்டும், அக்காலத்தில், இவர்களெல்லோரும் ஒரே ஜாதியாராய்,

3

ஒரே இடத்தில் வஸித்திருக்க வேண்டும் என்றும், அவ்விடந்தான் மேற்கூறிய மத்ய ஆசியா என்றும், இவ்வாதாரத்தால் நிர்ணயிக்கின்றனர்.

(2) புராணஸாம்யம் (பூர்வ கதைகளின் ஒற்றுமை.)

ஹிந்துக்களின் புராணங்களில் கூறப்படும் சில கதைகளின் அம்சங் (Plots) களும், அவைகளின் முக்ய புருஷர்க (Characters) ளும் க்ரீக் முதலான ஜாதியாரின் பூர்வகதைகளிலும் அதேமாதிரியாகவாவது அல்லது சற்று மாறுபாட்டுடனாவது காணப்படுவதால், ஹிந்துக்களுடையவும், க்ரேக்கர்களுடையவும் முன்னோர்கள் முன்னொரு காலத்தில் ஒரே ஜாதியாராய், ஒரே மதத்தை யநுஸரித்தவர்களாய் ஒரே இடத்தில் வஸித்திருக்கவேண்டும் என்று இவ்வாதாரத்தால் நிர்ணயிக்கப்படுகின்றது.

இவ்விரண்டு ஆதாரங்களால் மாத்திரம் ஹிந்து ஐரோப்பியர்களின் ஜாதிஸாம்யமும், தேசஸாம்யமும் நிராக்ஷேபணையாய் நிரூபிக்கத் தக்கதன்று. பாஷாஸாம்யத்தால் மாத்திரம் ஜாதிஸாம்யமும் நிச்சயிக்கத்தக்கதன்று. உதாஹரணம், நமது தமிழ்நாட்டில் வஸிக்கும் ப்ராஹ்மணர்கள் தங்கள் பூர்வ பாஷையாகிய ஆர்ய பாஷையையும், ஸம்ஸ்க்ருத பாஷையையும் முற்றிலும் மறந்து, தமிழ் பாஷையையே முற்றிலும் வழங்கிவருகின்றனர். அதனால், ப்ராஹ்மணரும் தமிழரும் ஸஜாதீயர் என்று கல்பிக்க முடியுமா?

இதுபோலவே இந்திய கிறிஸ்தவர்களில் சிலர் தங்கள் தாய்ப் பாஷையான தமிழ்ப் பாஷையை முற்றிலும் மறந்து அதைப் பேசுவதே அகௌரவம் என்றெண்ணி, நடையுடைபாவனைகளில் போல பாஷையிலும், ஆங்கிலேயர் மாதிரியே நடிக்கின்றனர். இதனால், இந்தியகிறிஸ்தவர்களும் ஆங்கிலேயரும் ஸஜாதீயர்களென்று நிரூபிக்க முடியுமா?

தவிரவும், பினங், மலாக்கா, சிங்கப்பூர், மொரீஷியஸ் முதலான இடங்களில், இந்தியரநேகர் குடியேறுகின்றனர். அவர்கள் இரண்டு மூன்று தலை முறையில் தங்கள் தாய்ப் பாஷைகளை முற்றிலும் மறந்து அத்தேச பாஷை வழங்கத் தொடங்குகின்றனர். ஆதலால் இவ்விரண்டு ஜாதியாரும் ஒரே ஜாதியாரென்று சொல்லத் தகுமா?

மேற்கூறிய உதாரணங்களைப்போல இன்னும் பல உதாரணங்களால், பல ஜாதியாரானலும், ஒரே பாஷை பேசும்படி பல காரணங்களால் ஏற்படலாமென்றும், பாஷைகளின் ஒற்றுமைகள் மாத்திரம் ஸஜாதீயத்தைக் கல்பிக்கமாட்டாதென்றும், ஏனைய ஆதாரங்களால் ஸஜாதீயமானது நிரூபிக்கப்படுமானல், பாஷாஸாம்யமும் அந்நிரூபணத்துக்குச் சற்று ஒருவேளை உதவலாமென்றும் அறியலாம்.

புராண ஸாம்யத்தால் மாத்திரம் ஸஜாதீயம் கல்பிக்கத்தக்கதல்ல. அநேக காரணங்களால், ஒரு ஜாதியார் அந்ய ஜாதியாரின் நாகரிகங்களை அநுஷ்டிக்கலாம். அவர்களின் அதிசயமான பூர்வ கதைகளையும், ஸம்ப்ரதாயங்களையும் தங்கள் ஆசாரணைக்கு அங்கீகரித்துக் கொள்ளலாம். உதாரணம், தக்ஷிண இந்தியாவில் வஸிக்கும் த்ராவிடர்கள், அநேகமாய், ஆர்யர்களின் புராணக்கதைகளையும், தேவதா உபாஸனைகளையும், அங்கீகரித்துக் கொண்டிருக்கின்றனர். அதே மாதிரி, இந்தியக்கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவ பூர்வ சரித்திரங்களை யங்கீகரித்துக் கொண்டிருக்கின்றனர். இது தவிர, அநேக அந்ய தேசக்கதைகளை நமது பாஷைகளில், மொழி பெயர்க்கின்றோம். அரேபிய இராக்கதை (Arabian Nights)களும், இந்தியரின் பஞ்ச தந்திரக் கதைகளும் உலகெல்லாம் அநேக பாஷைகளில் அநேகமாய்ப் பரவியிருக்கின்றன. இதனல் மாத்திரம் இவர்களெல்லோரும் ஸஜாதீயர்களென்று கல்பிக்கத்தகுமா? இதனல் புராணஸாம்யத்தால் மாத்திரம் ஜாதிஸாம்யம் கல்பிக்கத்தக்கதன்று.

மேற்கூறியவைகளினின்றும் முக்கியமாய் நாம் அறியக்கூடியதென்னவென்றல், மத்ய ஆசியா உத்பத்தி ஸித்தாந்த (Central Asia theory) மானது, மேற்கூறிய இரண்டு ஸித்தாந்தங்களால் நிரூபிக்கத் தக்கதன்று. ஒருவேளை இனி கிடைக்கப்படும் ஆதாரங்களால், நிரூபிக்கப்படுமாயின், மேற்கூறிய ஆதாரங்கள் ஒருவாறு உதவிபாதாரங்களாய் ஏற்படலாம். மேற்கூறிய ஸித்தாந்தத்துக்கு மாறுப் வேறொரு ஸித்தாந்தமும் சொல்லலாம். அதாவது பூர்வ ஆர்யர்களின் ஜன்ம பூமியானது ஹிமபமலையைச் சுற்றியுள்ள ப்ரதேசங்களென்றும், அங்கிருந்து அநேக பிரிவினர் அநேக விடங்க

ருந்துச் சென்றிருக்கலா மென்றும் சொல்லலாம். இதுவும் ஊகிக்கும் நிலைமையி (Hypothetical) லிருக்கின்றதே யொழிய நிரூபண நிலைமையடைந்து விட்டதாய் இந்நிலைமையில் சொல்ல முடியாது.

ஆகையால், இப்பொழுது இந்திய ஆர்யர்கள், இந்தியாவில் வாஸஞ்செய்யத் துவங்கிய காலம் முதல் அவர்களின் சரித்திரத்தைச் சுருக்கமாய்க் கவனிப்போம்.

பூர்வகாலம். (Prehistoric Age.)

மனித ஜாதியாரின் பூர்வ நாகரிகத்தை யறிவதற்கு சாதனமானவைகளில் அதி பூர்வ ஆதாரம் ரிக்வேத மந்த்ரங்களே. இந்திய ஆர்யர்கள் இந்தியாவினின்று வெளிப்ரதேசங்களில் வசித்ததாகவும், அங்கிருந்து இந்திபாவில் குடியேறினதாகவும் சொல்லுவதற்கு அவ்வளவு ஆதி சாஸநங்களாகிய ரிக்வேதத்தில் கூட யாதொரு ஆதாரங்களும் காணப்படவில்லை. அந்த ஸித்தாந்தத்தை நிரூபிக்க ஸமகால (Contemporary) சாஸநங்களும் அகப்படவில்லை.

பூர்வ ஆர்பர்கள் சாந்தவான்களென்றும் பிறர் வழிக்குச் செல்லாது தங்கள் காரியங்களை மாத்திரம் கவனித்துக்கொண்டு, அநாவசியமாய்த் தாங்களே கஷ்டங்களுக்குட்படுத்திக் கொள்ளாமல், நீர்வளமும் நிலவளமும் பொருந்திய கங்கை யமுனை நதீதீரப்ரதேசங்களில் ப்ரக்ருதியின் இயற்கையா லுண்டாகும் பழங்கள், புஷ்பங்கள் முதலான பலவகைப் பலன்களையும் இயற்கையற்புதங்களையும் அநுபவித்து அதிக ஸாவதாநமாய்க் காலங்கழித்து வந்தார்கள். ஆகாய மளாவிய உயர்ந்த ஹிமாசலத்தின் அற்புத மகிமையும், என்றும் குறையாத ஜீவநதிகளின் காம்பீர்யமும், இரண்டு ஸந்த்பா காலங்களும், சூர்ய உதய அழகும் அவர்கள் மநத்திற்கு எப்பொழுதும் ஆஹ்லாதத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணிக் கொண்டிருந்தன.

“போது மென்ற மனமே பொன் செப்பு மருந்து” என்ற பிரகாரம் எப்பொழுதும் ஆத்மஸந்துஷ்டர்களாய், பிறஜாதியாரிடமிருந்து பயமாவது, தங்களுக்குள்ளேயே கலகமாவது கொஞ்சமுமில்லாது அவர்கள் வெகு சாந்தமாய் வாழ்ந்துவந்தார்கள்.

அந்த உத்தமமான காலத்தில் எல்லாம் மனிதர்களுக்கு இயற்கையாகவே சித்தமாயிருந்தன. அவர்கள் கொஞ்சமேனும் ப்ரயாஸையின்றி தங்களுக்கு வேண்டியவைகளையெல்லாம் அநுபவித்து வந்தனர்.

அக்காலத்தில் ஆர்யர்களுக்குள் பரஸ்பரம், க்ரோதம், அஸூயை முதலான யாதொரு விரோதமுமில்லாமல் அந்யோந்யமாய் வாழ்ந்து வந்தார்கள். தற்காலத்தில் 'பிழைப்புக்கே போராட்டம்' (Struggle for existence) என்று வழங்கிவரும் தத்துவமானது அக்காலத்தில் கிடையாது. ஏனென்றால், அக்காலத்தில் மனிதருக்கு வேண்டிய வளவு ப்ரக்ருதியின் அதிக சம்பத்தால் கிடைத்தது

இவ்வுத்தமமான ஆதிகாலம் (Pre-historic age) தான் க்ருதயுகம் (Age of Nature's plenties) என்றும், ஸத்ய யுகம் என்றும் நமது புராணங்களிலும், பூர்வ க்ரந்தங்களிலும் அவ்வளவு அற்புதமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இவ்வற்புத கால வர்ணனையைப் பற்றியும், அக்காலத்தில் நமது முன்னோர்களாகிய பூர்வ ஆர்யர்கள் வஸித்த தேசவளமையையும், அவர்களநுபவித்த இயற்கை யற்புதங்களைப் பற்றியும், அவர்கள் மநமடங்காமல், குதூஹலத்துடன் பாடியிருக்கும் ரிக்வேத மந்த்ரங்களில், ஆதி மந்த்ரங்களிற் சில விவரிக்கின்றன.

இரண்டாவது காலம்.

இந்நற்காலம் எவ்வளவு காலம் கொண்டு செல்லும்! கால தேச வர்த்தமாநங்கள் மாறுபட ஆரம்பித்தன. ஆர்யர்களும் ஜநப் பெருக்கத்தால் தாங்கள் முன்னிருந்த ஸரஸ்வதீநதீதீர ப்ரதேசங்களினின்றும் பிரிந்து சிலர் கிழக்கே கோசலதேசஞ் சென்றனர். சிலர் மேற்கே ஸிந்துதீரஞ் சென்றனர். சிலர் தெற்கே ப்ராயாகை (Allahabad) வரை சென்று குடியேறினர். அக்காலத்தில் தான் அவர்கள் முதல் முதல் அந்நிய ஜாதியாருடன் கலக்க ஆரம்பித்தனர். சில ஜாதியார் ஆரியரின் உத்தம நாகரிகத்துக்கு ஈடுபட்டு அவர்களதிகாரத்துக் குட்பட்டனர். சிலர் ஆரியர்களை எதிர்த்துத் தோல்வியடைந்தனர். சிலர் ஆர்யர்களுக்கு எப்பொழுதும் ஹிம்ஸை செய்து கொண்டே வந்தனர். சில அந்யதேச ஜாதியார்கள்

ஆர்யபூமியில் படையெடுத்துவந்தனர். ஜனப் பெருக்கத்தால் தங்களுக்குள்ளேயே கலகம் நடந்து, அதன்மூலமாய்ச் சிலர் பிரிந்து மேற்கே ஸிந்துநதியைத் தாண்டிச் சென்றனர். எவ்வளவோ சாந்தமாயும் ஸமாதானமாயும் வாழ்ந்துவந்த ஆர்யர்களுக்கு முதல் முதல் இவ்வளவு கஷ்டங்களெல்லாம் ஸம்பவிக்க ஆரம்பித்தன. ஆர்யர்களுக்கும், அவர்கள் எதிரிகளாகிய தாஸ்யர்களுக்கும் நடந்த சண்டைகளைப்பற்றி ரிக்வேதத்தில் விசேஷமாய் வர்ணிக்கப்பட்டிருக்கின்றது. ஆர்யர்களிடமிருந்து பிரிந்து மேற்கே சென்று பாரஸீகத்தில் குடியேறினவர்கள்தான் 'இரானியர்கள்' என்பவர்கள். மற்ற பாகங்களினின்றும் தோன்றிய எதிரிகள், ராக்ஷஸர்கள் என்றும், தங்களுக்குள் பிரிந்து தங்கள் பூர்வ மதத்தை யநுஸரிக்காதவர்கள் அஸுரர்களென்றும் வ்யவஹரிக்கப் பட்டார்கள். இக்காலத்தில்தான் தங்களையும் தங்கள் பொருள்களையும் யாகாதிகளையும் காப்பாற்றிக் கொள்ளுவதற்காக, க்ஷத்ரியர்கள் என்ற ஓர் வகுப்பினர் ஏற்பட்டார்கள். இவர்கள் வரவர பரம்பரையாய் வேறுவர்ணத்தாராய் விட்டார்கள். ஆகையால், யாகாதிக்ரதுக்களையும், வேத அத்யயநம், தேவஉபாஸனைகள் முதலான வைதிக அநுஷ்டானங்களைக் கவனித்து வந்தவர்கள் ப்ராஹ்மணர்களாகவும், ராஜாங்கம், ராணுவம், நிர்வாகம் முதலான லௌகிகங்களை அநுஷ்டித்தவர்கள் க்ஷத்ரியரானார்கள். தேசக்ஷேமத்துக்கும் ஸம்பத்துக்கும் அபிவிருத்திக்கும் சாதகமான வியாபாரம் முதலிய தொழில்களைச் செய்த மற்றவர்கள் வைச்யர் அல்லது சாதாரண ஜனங்களென்றும், அநார்யர்களாய் ஆர்யர்களின் அதிகாரத்துக்குள் வந்த அந்ய ஜாதியர்கள் சூத்ரர்களென்றும், இவ்வாறு இவ்விரண்டாவது காலத்தில் நான்கு வர்ணங்கள் ஏற்பட்டன. முதல் மூன்று வகுப்பினரும் ஆர்யவம்சத்தவர்களானதால், வேத அத்யயந முதலான ஆர்யர்களின் உத்தம வைதிக அநுஷ்டானங்களில் அவர்களுக்கு அதிகாரமுண்டு. முதலில் இவ்வர்ணங்கள் சௌகர்யத்தின் பொருட்டு ஏற்பட்டனவாயினும், வரவர பரம்பரை (Hereditary) யாய் ஏற்பட்டுவிட்டன. அக்காலத்தில் க்ஷத்ரியருக்கும் ப்ராஹ்மணருக்கும் யாதொரு விரோதமுமில்லாமல் அந்யோந்யமாய் வாழ்ந்து வந்தார்கள். அக்காலத்தில் ஆர்யர்கள், ஆத்மரக்ஷணை (Defensive)

யின் பொருட்டு மாத்திரம் யுத்தத்துக்குச் சென்றனரே யொழிய தற்காலத்தில் அமெரிக்கா இந்தியர்களை, அத்தேச நாகரிக ஜாதியார் அழிப்பது போலவும், ஆசியாதேசத்தாரை தென் ஆப்பிரிக்காக் காரர் படுத்துவது போலவும், ஆஸ்த்ரேலியாவின் பூர்வகுடிகளை அத்தேசத்தில் வசிக்கும் ஐரோப்பியர் வேட்டையாடுவது போல வும், முற்காலத்து ஆர்யர்கள் பலஹீநரான அந்யஜாதியாரை, நர வேட்டையாடவாவது, நாசஞ்செய்பவாவது, அல்லது ஹிம்ஸை செய்பவாவது துணியும்படி அவ்வளவு குரூரமுடையவர்களா யிருக்கவில்லை. "தற்காலத்தைப்போல முற்காலத்திலும் ஆர்யர்கள் அவ்வாறே கொடுமை செய்திருக்கவேண்டும்" என்று தோஷம் கற் பிக்கும் மேல்நாட்டார்களின் ஸித்தாந்தமானது, (ஆத்மவத் ஸர்வபூ தேஷு) "தங்களைப்போலத்தானே பிறரும்" என்ற கொள்கையா லும் சரித்திரம் திரும்பத்திரும்ப வருகின்றது (History repeats itself) என்ற பொய் ஸித்தாந்தங்களாலும், பிறரைப்பற்றி நலங்கூறு வதில் பொறுமை கொள்பவர்களாலேயும் கற்பிக்கப்படுகின்றது.

இக்காலந்தான் நமது புராண இதிகாஸங்களில் கூறியுள்ள இரண்டாவது (த்ரேதாயுகம்) காலம். இக்காலத்தில் மேற்கூறிய வாறு வர்ணாச்ரம தர்மங்கள் வேறுவேறாய்விட்டன..

இக்காலத்தில் தான் ரிக்வேதத்தில் பெரும்பான்மையான மந்திரங்கள் கவநம் செய்யப்பட்டன. இம்மந்திரங்களி னின்றும் ஆர்யர்கள், பஞ்சாப் முதல் கோசலதேசம் வரையிலும், ஹிமாசலம் முதல் ப்ரயாகை வரையிலும் பரவிவிட்டதாய்த் தெரியவருகின்றது. இதுவரை ஒரேவேதமா யிருந்தது த்ரயீ அல்லது மூன்று வேதங் களாய்ப் பிரிந்துவிட்டது. ஆதி மந்த்ரங்களெல்லாம் ரிக்வேதமாக வும், அவற்றில் யாகாதிகளுக்கு முக்கியமாய் உபயோகப்படக் கூடியவைகளும், பல புதிதாய்க் கவநம் செய்யப்பட்டவைகளும் யஜுர்வேதமாகவும், காநமுறைக் குபயோகப்படத் தக்கவைகள் ஸாமவேத மாகவும் பிரிந்தன.

மூன்றுவது காலம்.

இனி மூன்றுவது காலத்தைப்பற்றி விவரிப்போம். இதுதான் த்வாபரயுகம் என்று நமது புராணங்க்ளில் சொல்லப்படுவது.

இக்காலத்தில், பிராஹ்மணர்கள் மற்றைய ஜாதியாரைப் பார்க்கிலும் தங்கள் மேன்மையை ஸ்தாபிக்கத் துவங்கினார்கள். நான்கு வர்ணங்களுக்கும் வித்யாஸங்கள் தெளிவாய் ஏற்பட்டுவிட்டன. முதல் மூன்று வர்ணங்களுக்குட்படாதவர்கள், சூத்ரர்கள் அல்லது நான்காவது வர்ணத்தாராயினர், சூர்ய சந்த்ர வம்சம் முக்கியமாய் உயர் பதவி யடைந்தன. கிழக்கே கோஸலதேசம்வரை ஆர்யர்கள் குடியேறிவிட்டார்கள். இக்காலத்துவக்கத்தில் ராமாயண விருத்தாந்தங்களும் இறுதியில் மஹாபாரத விருத்தாந்தங்களும் நடந்தன. இக்காலத்தில்தான் பல விடங்களில் வெவ்வேறுப்ச் சிதறிக்கிடந்த வேத மந்த்ரங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு, ஸம்ஹிதைகளாய் ஒழுங்கு படுத்தப்பட்டன. அவைகளைத் தெளிவாய் அறியுமாறு பிராஹ்மணங்கள் எழுதப்பட்டன. அநேக யக்ஞபாகாதிக் கிரியைகளை நடத்தும் முறைகளும், பூர்வ அநுஷ்டாநங் (Forms and precedents) களும், எந்தெந்த மந்த்ரங்கள் எந்த சந்தர்ப்பத்தில் உபயோகிக்கத் தக்கவை யென்பதும், அதனால் ஏற்படும் பலன்களும், அவ்வாறு பலனடைந்தவர்களின் சரித்திரங்களும், அக்காலத்து ஜநங்களின் நடையுடைபாவனைகளும், தேசாசாரம் மதாசாரங்களும் ப்ராஹ்மணங்களில் விவரமாய்க் கூறப்பட்டிருக்கின்றன.

இக்காலத்தில்தான், நிர்மாநுஷ்யமான வநப்ரதேசங்களில், அவ்வவ் வரசர்களின் ஸம்ரக்ஷணைபால், பிராஹ்மணர்களும், ரிஷிகளும், ஆச்ரமங்களில் நிர்ப்பயமாய் வஸித்து, தபஸ்விகளாய்த் த்யாநம் செய்து இவ்வுலக அமைப்பையும், அதன் உற்பத்தியையும், அதன் காரணத்தையும், அதன் ஸ்ருஷ்டி கர்த்தாவையும் பற்றி ப்ரஹ்மவிசாரணைகள் செய்ய ஆரம்பித்தார்கள். அவர்கள் அபிப்பிராயங்களும், விவாதங்களும், ஆரண்யங்களிலும், பின்பு உபநிஷத்துக்களிலும் காணப்படுகின்றன. அநேக அரசர்களும் தங்கள் குமாரர்களிடம் ராஜ்யபாரங்களை ஒப்புவித்துவிட்டு, . ரிஷிகளின் ஆச்ரமங்கள் சென்று, வேதாந்த உபதேசங்கள் பெறத்துவங்கினர். இக்காலத்துவக்கத்தில், ப்ராஹ்மணர்களுக்கும் க்ஷத்ரியர்களுக்கும் சில விரோதங்கள் ஏற்பட்டன வாயினும், அவைகளெல்லாம் கடைசியில் ஸமாதாநமாய் முடிந்தன. வஸிஷ்ட விசுவாமித்திரஸம்

வாத விருத்தாந்தங்கள், இவ்விரோதத்துக்கு முக்ய உதாகரண மாய் விளங்குகின்றது.

பிறகு வெகுகாலம்வரை இருவர்ணத்தாரும் மிக அந்யோந்ய மாய் வாழ்ந்து வந்தார்கள். இக்காலத்தின் இறுதியில் குருக்ஷேத்ர பூமியில் மஹா பாரத யுத்தமென்ற அகோர யுத்தம் நடந்தது. இந்த யுத்தத்தில், இந்தியாவிலுள்ள அநேக ராஜர்கள் இருகட்சியா ய்ப்பிரிந்து இருதிறத்தாருக்கும் உதவி செய்தார்கள். இந்த யுத்தத் தால் க்ஷத்திரிய ஜாதியே அநேகமாய் நாசமடைந்தது. இதுதான் இந்தியர்களின் கஷ்டகாலத்துவக்கம். ஹிந்துக்கள் தங்கள் பதவியை இது முதல் இழக்க ஆரம்பித்தார்கள். இதற்குப் பிறகு இழந்தபத வியை மறுபடியவர்கள் அடையவேயில்லை. ராமாயணகாலத்தில் ஹிந்துக்கள் மஹோந்நத பதவி யடைந்தார்கள். மஹா பாரதயுத் தகாலம் வரை அப்பதவியை யவர்கள் காப்பாற்றிவந்தார்கள். பிறகு அவர்களிழந்து விட்டார்கள்.

நான்காவது காலம்.

இது முதல் நான்கு வர்ணத்தாருக்கும் பரஸ்பரவிரோதங்கள் ஏற்படத் துவங்கின. க்ஷத்ரியர்கள், சூது முதலான கெட்டதொழில் களில் தலைப்பட்டு, பலஹீனர்களாய் விட்டார்கள். அயல் தேசத்தி னின்றும் ஹூணர்கள், யவனர்கள், சாகர்கள் முதலான அந்ய ஜாதியார்கள் இந்தியா மீது படையெடுத்து நாசஞ்செய்யத் தொடங் கினர்கள். ஆர்யர்களுக்கு இயற்கையாயுள்ள ஜாதியபிமாநம், மதாபி மாநம், தேசாபிமாநம் எல்லாம் அற்றுப் போய்விட்டன.

இதன் இயற்கைப் பலனால், ஹிந்துமதமானது க்ஷீணதசை யடையத் துவங்கிற்று. முன் போலப் பலமான ராஜாங்கங்களு மில்லை. அவைகளின் உதவியுமில்லை.

ஆனால், ப்ராஹ்மணர்கள், தங்கள் ஸர்வஸ்வமான, வேதங்களை மாநரூபமாயும், புஸ்தகரூபமாயும், அரண்யங்களிலும், குகைகளிலும் தங்களாலியன்றவரை காப்பாற்றி ஏதோ இப்பொழுது இருக்கும் நிலைமைக்காவது கொண்டு வந்தார்கள். இக்காலந்தான் கலிகாலம்அல்லது கஷ்டகாலம்என்று சொல்லப்படுவது. இது மஹாபாரத யுத்த முதல் ஆரம்பித்துவிட்டது. அர்ஜுநன் பௌத்திரனை ஜநமேஜயர் அரசாட்சிக்குப் பிறகு, சந்திரவம்சத்தைப் பற்றிச் சரித்திரங்களில் ஒன்றும் சொல்லப்படவில்லை. இது தான் இந்துதேச சரித்திரத்தில் முக்யமான அந்தகாரகாலங்களில் ஒன்று. அநேக ராஜ்யங்கள் ஸ்தாபிக்கப்பட்டு சிறிது சிறிதுகாலத்தில், நாசமடைந்தன. அரசர்கள் தங்களுக்குள்ளாகவே கலகங்கள் செய்து கொண்டார்கள். ஒற்றுமை யென்பதே கிடையாது. ராஜாக்கள் குடிகளை வருத்தத் துவங்கினர்கள். குடிகள் ராஜகலகங்கள் செய்து ராஜாக்களைத் துரத்தினர்கள். இவைகளைப் பற்றி அக்காலத்துச் சிற்சில க்ரந்தங்களில் ஆங்காங்கு கூறப்பட்டிருக்கின்றது. சந்த்ரவம்சமழிந்த பிறகு மகததேசமானது ப்ருஹத்ரத வம்சத்தரசர்களால் ஆளப்பட்டு வந்தது. இவ்வரசர்கள் 22 பேர்கள் 515 வருஷகாலம் அரசாண்டார்கள். பிறகு ப்ரத்யோதன் முதலான 5 அரசர்கள் 138 வருஷகாலமும், சிசு, நாகர் முதலான 10 அரசர்கள் 362 வருஷமும், பிறகு 9 நந்தர்கள் 100 வருஷமும் மகத தேசத்தையாண்டு வந்தார்கள்.

கி.மு. 330 ல் நந்தர்களுக்குப் பிறகு, சந்திரகுப்தன் மகததேசத்தரசனுகி மௌர்யராஜவம்சத்தை ஸ்தாபித்தான். இவன் தான் இவ்வளவு காலத்துக்குப் பிறகு சக்ரவர்த்தியானன். இவன்காலம் முதல், இவன் பௌத்திரனை அசோகன்காலம் (கி மு. 250) வரை மகத ராஜ்யம் மஹோந்நத தசையடைந்தது. சந்திரகுப்தன் ஸதஸில் க்ரீக்தேச ஸ்தாநாதிபதியாய் விளங்கிய மகாஸ்தனிஸ் என்பவராலும் இன்னும் அக்காலத்து க்ரீக் சரித்திரக்காரராலும், இக்கால விருத்தாந்தங்கள் தெளிவாய் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

அசோகன் காலத்துக்குப் பிறகு மகத ராஜ்யமும், பலஹீநமாய் விட்டது. அதற்கு ஆதீநமாயிருந்த சிற்றரசர்களெல்லாம் ஸ்வாதீநமாய், ஸ்வராஜ்யங்கள் ஸ்தாபித்துக் கொண்டு விட்டார்கள்.

மகத ராஜ்யம் சிதில மடைந்த பிறகு முக்யமாய் மூன்று ராஜ்யங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.

கிறிஸ்தவ சகாப்த ஆரம்பகாலத்தில், கானிஷ்க சக்ரவர்த்தியின் ஆளுகையில் காச்மீர தேசமும், குப்த ராஜவம்சஸ்தாபகனன விக்ரமாதித்யன் ஆளுகையில் மாளவதேசமும், அதற்கு ராஜதாநியான உஜ்ஜயினீநகரும் ஸ்தாபிக்கப்பட்டன. தெற்கே கலிங்கதேசத்தில், ஆந்த்ர ஜாதியார் ஸ்வாதீநமாய் அரசாள ஆரம்பித்தார்கள் அவர்களும் கி. பி. 7-வது நூற்றூண்டு வரை அரசாண்டார்கள். இக்காலமும், ஹிந்து சரித்திரத்தில் ஓர் அந்தகாரமான காலம். பிறகு 13-வது நூற்றூண்டில் விஜயநகரராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது. இத்தேசத்தரசர்கள் மஹமதியர் தக்ஷிணதேசத்தில் ஆக்ரமிக்காவண்ணம் சுமார் 200 வருஷ காலம் வரை தடுத்து வந்தார்கள். இந்த இராஜ்யமும், தலைக்கோட்டை யுத்தத்தோடே நாசமடைந்தது.

விஜயநகர ஸம்ஸ்தாந மழிந்த பிறகு, பெயருக்குக்கூட ஹிந்து ஸம்ஸ்தாநமென்பது கிடையாது. இத்துடன் ஹிந்துக்கள் உண்மையான ராஜத்துவத்தையும் இழந்துவிட்டார்கள்.

(இன்னும் வரும்.)

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்.

பிரஹ்மக்ஞாந தர்சநம் (பாலபாடம்.)

(97-ம் பக்கத் தொடர்ச்சி.)

4-வது அத்தியாயம்.

புநர்ஜந்மம்.

---

1. ஐரோப்பா முதலான மேற்கு நாடுகளிலுள்ளவர்களுக்கு புநர் ஜந்மமுண்டென்பது தெரியாது. அது அவர்களுக்கு நூதநமான கொள்கை. இந்து தேசத்திலும் இன்னும் சில இதரதேசங்களிலுமுள்ள அநேக கோடி ஜநங்களுக்கு இது மிகவும் நம்பிக்கையுள்ள சுலபமான கொள்கை. அவர்களிலநேகர் மிக்க புத்திமான்களாகவும் நல்லவர்களாகவும் படித்தவர்களாகவுமிருக்கிறார்கள். வைதிக அரசர்கள் காலந்தொடங்கி அவர்கள் இக்கொள்கையைக் கைப்பற்றி பொழுகி நடக்கிறார்கள். மேற்கு நாட்டார்களோ அதை முற்றிலும் மறந்து விட்டார்கள்.

2. இக்கொள்கையில் நம்பிக்கையுள்ள ஜநங்களை அக்ஞாநிகளென்று மேற்கு நாட்டார்கள் சொல்லுகிறார்கள். அப்படிச் சொல்லுவது மிகவும் தப்பிதமாயும் மூடத்தனமாயுமிருக்கிறது. இந்துக்கள் மேற்கு நாட்டார்களை அக்ஞாநிகளென்று நினைப்பதுந் தவிர மேல்நாட்டு காட்டு ஜநங்களென்றும் மதிக்கிறார்கள்.

3. இந்த விஷயத்தில் ஒரு சிறு கதையுண்டு. ஆங்கில தேசத்துச் சில சிறுவர்கள் அந்நிய தேசங்களைப் பார்க்கப் புறப்பட்டார்கள். அப்படிப் போகும்போது தங்களுக்கு அந்நிய தேசங்களைப் பார்ப்பதற்கு மிகவும் பிரியமென்றும் ஆனால் அத்தேசத்து ஜநங்களைத் தாங்கள் விரும்பவில்லையென்றும் சொல்லிக் கொண்டார்கள். இவர்கள் பிரென்சு தேசத்துக்குள் பிரவேசித்து பிரயாணம் போகும்போது அவ்விடத்திலுள்ள ஒரு சிறு குழந்தை இவர்களைப் பார்த்து அவலக்ஷணமான அந்நியர்களென்று சொன்னதைக் கேட்டு வெட்கமடைந்தார்கள்.

4. நாம் மதவிஷயங்களைப்பற்றிப் பேசும்போது இக்குழந்தைகளுக்குச் சமானர்களாயிருக்கிறோம். பிரஹ்மக்ஞாந சபையைச் சேர்

ந்த நாம் பிறரை அக்ஞாநிகளென்று சொல்வதைத் தவிர்க்கவேண்டும். மேற்கு நாட்டார்களுக்கு "பைபில்" என்ற கிறிஸ்து வேத புஸ்தக மிருப்பது போல் இந்துக்களுக்கு வேதங்களிருக்கின்றன. இவ்விரண்டிலும் போதனைகளும் உண்மைகளும் ஒன்றாக விருந்தாலும் ஒவ்வொரு மதஸ்தர்களும் அவைகளை ஒவ்வொரு விதமாய் அர்த்தம் செய்திருக்கிறார்கள். இதனால் தான் வித்தியாசம் போல தோன்றுகிறது.

5. புநர்ஜந்மமென்றால் பூலோகத்தில் மறுபடியும் ஸ்தூல சரீரத்துடன் பிறத்தல் என்று அர்த்தம்.

6. இச்சரீரங்கள் நம்முடையவைகள். நாமே இச்சரீரங்களல்லர். அவைகள் நம்முடைய சொத்துக்கள். அவைகளில் நாம் குடியிருந்து அவைகள் கிழண்டு உபயோக மில்லாமற் போகும்போது அவைகளை நாம் தள்ளி விடுகிறோம். அப்போது அச்சரீரங்கள் கட்டுவிட்டு இறந்து போகின்றன. அந்தந்தத் தேசாசாரங்களின்படி இறந்து போன சரீரங்களை தஹநமாவது புதைக்கவாவது செய்கிறார்கள். நாம் கொஞ்சகாலம் புவர்லோக சுவர்லோகங்களில் வாஸம் செய்து பின்பு புதிய சரீரங்களுடன் பூலோகத்துக்குத் திரும்பிவருகிறோம். அப்படி வரும்போது முந்தின சரீரங்களில் நாமநுபவித்த விஷயங்களை மறந்து விடுகிறோம்.

7. இப்படி மறந்து போவதற்குக் காரணம் யாதெனில், ஒவ்வொரு மறுபிறப்பிலும் நமக்கு நூதந சரீரம் ஏற்படுகிறது. அதனால் நூதநமூளை, நூதந மநம், வித்தியாசமான இடங்கள், வேறு பெற்றோர்கள், அநேகமாய் நூதநமதம் இவைகளுடன் பிறக்கிறோம். கடவுளின் பள்ளிக்கூடத்தில் மிக உயர்வான வகுப்பினரான ஞாநிகளாக ஆனால் தான் நமக்குப் பூர்வ ஜந்மங்களின் ஞாபக முண்டாகும்.

8. நாம் பூலோகத்துக்குத் திரும்பி வருகிற ஒவ்வொரு காலத்திலும் முன் ஜந்மத்திற் கற்றுக்கொண்டதைவிட கொஞ்ச மதிகமாய்க் கற்றுக் கொள்ளுகிறோம். நாமிறந்து போய் மறுபடி பிறப்பதற்கு மத்திய காலத்தில் சுவர்க்க லோகத்திற் சில காலமிருக்கிறோம்.

அப்போது முந்தின சரீரத்தில் நாம் பூலோகத்திலிருந்தபோது நமக்கு நேர்ந்த சகல விஷயங்களையும் குறித்து ஆலோசிக்கிறோம். அதனால் நமக்கு அறிவு விருத்தியாகி மறுபடியும் பூலோகத்துக்குத் திரும்பி வரும்போது அநேக விஷயங்களில் முந்தின ஜந்மத்திலிருந்ததைவிட கொஞ்சம் மேன்மையை அடைந்திருக்கிறோம்.

9. முந்தின ஜந்மத்தின் அந்தியத்திலிருந்ததைவிட அடுத்த ஜந்மத்தின் ஆரம்பத்தில் நம்முடைய மநமானது அதிக அகன்றதாயும் பலமானதாயுமிருக்கும். ஆனால் அடுத்த ஜந்மத்தின் ஆரம்பத்தில் நம்முடைய நூதந சரீரத்தையும் மூளையையும் பூர்வ அப்பியாசத்திற் பழக்குவதற்குக் கொஞ்ச காலம் செல்லுகிறபடியால் நாம் அறிவில்லாத நூதந சிசுக்கள் போல் காணப்படுகிறோம்.

10. நேற்றைய திநமென்பதே ஞாபகமில்லாத காட்டுமனிதர்களைப்பற்றி முன்னமே சொல்லியிருக்கிறோமல்லவா? அவ்விதமே சிலதேசங்களிலும் நம்முடைய அநேக புஸ்தகங்களிலும் சென்ற காலத்தை நேற்றையத்திநமாகவும் தற்காலத்தை இன்றையத்திநமாகவும் வருங்காலத்தை நாளையத்திநமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

"களிமண் இரும்பாக கெட்டியாய் விடுகிறது. ஆனால் குயவன் அம்மண்களைப் பாண்டமாகச்செய்கிறான். இன்று திநம் நமக்கு சம்பவிக்கிற ஊழ்வினைப் பயனுக்கு நேற்றையத் திநம் நாம் கர்த்தாவாயிருந்தோம்" என்று ஒரு மஹான் சொல்லியிருக்கிறார்.

11. சங்கிலிவளையங்கள் போல் நம்முடைய ஜந்மங்கள் ஒன்றோடொன்று கோக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஜந்மத்திலும் நாம் சில வேலைகளைச் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். சோம்பலினால் ஒரு ஜந்மத்திலந்த வேலைகளைச் செய்யாமலிருப்போமாகில் அடுத்த ஜந்மத்தில் அவைகளையும் சேர்த்துச் செய்யவேண்டி வரும். சிலருக்கு ஜாஸ்தியான வேலையும் சிலருக்குக் குறைவான வேலையும் இருப்பதற்கு இதுவே காரணமாம்.

(இன்னும் வரும்.)

வி. வெங்குசாமி ஐயர்.

சமாசாரம்.

ஒரு நன்கொடை:— ஸ்ரீமான் டாடா என்ற ஒரு பார்சி வியாபாரி, பெண் கல்வி அபிவிருத்திக்காக 30 லக்ஷம்ரூ. கொடுக்கிறதாக வாக்களித்து அதை செல வழிக்கும் முறையைப்பற்றி விரிவான விவஸ்தையை (Scheme) இந்தியன் சிக்ரடேரி ஆப்ஸ்டேட் (The Indian Secretary of State) என்பவருக்கு எழுதியனுப்பியிருக்கிறார்.

மின்சாரத்தின் உபயோகங்கள்:—மின்சார சக்தியானது (Electricity) பலவிதமாக உபயோகமாகிக் கொண்டுவருகிறது. அதன் உபயோகம் ஆயிரக்கணக்காய்ப் பெருகியிருக்கின்றது. சில அடியில் வருமாறு:—வண்டியை (Electric tram car) ஓட்டுகிறது, கப்பலை ஓட்டுகிறது, பங்கா இழுக்கிறது, மணியடிக்கிறது, விளக்காக ஜ்வலிக்கின்றது, தங்கமுலாம் வெள்ளிமுலாம் பூசுகிறது, இருவர் இரகசியத்தை வெளியிடுகிறது, தானே காநம்பாடுகிறது, பிறர் காநத்தை எவ்வளவு தூரத்தில் நிகழினும் தெரிவிக்கிறது, தூரத்தில் சொல்லும் சமாசாரத்தை யாதொரு தந்தியில்லாமல் அதே தொனியில் நேரில் தெரிவிக்கிறது, இன்னஜாதிமீன் சமுத்திரத்தின் இவ்வளவு ஆழத்தில் உலாவுகின்றதென மின்சாரத்தால் அமைக்கப்பெற்ற டேலிபோன் மூலமாய் மீன் பிடிக்கிறவன் அறிகிறான், பின்பு மின்சாரவிளக்கை அந்த அளவு ஆழமுள்ள ஜலத்திற்குள் தாழ்த்தி அதைச்சுற்றி குறித்த மீன்குழாங்கள் சேரச்செய்கிறான், பின்பு மின்சாரவேட்டினால் அவைகளை ஒரு வினாடியில் கொன்று தன் படகில் குவிக்கிறான். சமீபத்தில் தூக்கமில்லாமலிருப்பவர்களுக்கு தூக்கத்தை உண்டுபண்ணும்படியாக மின்சாரம் நூதனமாக உபயோகப்படுகிறதெனக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற ஜூலைமீ 19,20உ களில் ஈரோட்டில் கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள பிரஹ்மஜ்ஞாநக்கிளைச் சபைகளின் பெரிய கூட்டம் கூடிற்று. ஸ்ரீமான் வாடியா என்பவர் அக்ராஸநம் வகித்தார், சபை சிறப்பாயும் பயனுள்ளதாயும் நடைபெற்றது.

நாளிது ஆகஸ்டுமீ 23,24உ களில் தெலுங்கு நாட்டிலுள்ள பிரஹ்மஜ்ஞாநகிளைச் சபைகளின் கூட்டம் நெல்லூரில் கூடும். மாதுஸ்ரீ பெஸண்டு அம்மையே அக்ராஸநம் வகிப்பார்கள்.

அதே தேதியில் தஞ்சாவூர் ஜில்லா பிரஹ்மஜ்ஞாநக்கிளைச் சபைகளின் கூட்டம் பேராளத்தில் கூடும்.

ஸெப்டம்பர்மீ 20,21உ களில் சென்னை ஆதியாற்றிலுள்ள பிரஹ்மஜ்ஞாந சபையின் மூலஸ்தாநத்தில் சபையின் உள்வகுப்பைச் சேர்ந்தவர்களின் கூட்டம் கூடும்.

அக்டோபர்மீ 18,19உ களில் மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களிலுள்ள பிரஹ்மஜ்ஞாநகிளைச் சபைகளின் கூட்டம் முன் ஸ்ரீவைகுண்டத்தில் ஏற்பட்

டிருந்தது. இப்போது மதுரையிலேயே கூடுமென்றுதோன்றுகிறது. ஒருகால் மாதுஸ்ரீ பெஸண்டு அம்மை அக்ராஸநம் வகிப்பாரென நம்புகிறோம்.

இராஜ பிரதிநிதி (Viceroy) மஹாகனந்தங்கிய ஹார்டிஞ்ச் பிரபு அவர்கள் நாளதுவருஷ நவம்பர்மீ 24உ சென்னைப் பட்டணத்திற்கு விஜயஞ் செய்வார்களெனத் தெரியவருகிறது. ஒருகால் மண்டபம், பாம்பன் இரண்டுக்கும் மத்தியில் கட்டப்பட்டிருக்கிற புதிய ரயில்வே பாலத்தை எல்லாரும் உபயோகிக்கும்படியாக முதன் முதல் பிரவேசித்து திறப்பாரென்றும், அதன்மேல் மன்னாருக்கும், இராமேசுவரத்திற்கும் மத்தியில் பிரயாணிகளின் சௌகர்யத்திற்காக முதன் முதல் புகைப்பட்கு ஓட்டத்தையும் ஏற்படுத்துவார்களென்றும் தெரியவருகிறது. அக்காலத்தில் சென்னை ராஜதாநி கவர்னர் அவர்களும் (Ceylon) லங்கைத் தீவின் கவர்னர் அவர்களும் வருவார்கள் என்றும் அறிகிறோம். மதுரை வழியாய்ப் பாம்பனுக்குப் போகவேண்டியிருக்கிறபடியால் மதுரையில் இப்போது கட்டிக்கொண்டிருக்கிற (Victoria Edward Hall) விக்டோரியா எட்வார்டு ஹாலின் கிருஹப் பிரவேசமும் வைஸ்ராய் அவர்கள் விஜயம் செய்யும் காலத்து ஏற்படுத்தப்பட்டால் நலமாயிருக்கும்.

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீமான் இராமநாதன் அவர்களின் கல்லூரி:— ஸ்ரீமான் இராமநாதன் அவர்கள் பெண்களின் கல்வியபிவிருத்தியின் பொருட்டு யாழ்ப்பாணத்தில் உயர்தர வித்யாசாலை கட்டிடம் ஒன்று கட்டியிருக்கிறார்கள். இருநூறு ஸ்திரீகள் வித்யாசாலையிலேயே வஸித்து வாசிப்பதற்கு வேண்டிய அநுகூலமான சௌகர்யங்கள் செய்திருக்கிறார்கள். மேல் நாட்டுக் கல்வி முறையைக் கீழ்நாட்டார்களுக்கு எம்மட்டில் சரிப்படுத்தினால் சௌகர்யப்படுமோ, அம்மட்டில் மேல்நாட்டுக் கல்வி கற்பிக்கும் முறையில் மாறுதல்கள் செய்து அதை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். முக்கியமாய்த் தமிழ் ஜநங்களுக்கே இவ்வித்யாசாலையானது ஏற்பட்டுள்ளது. தமிழ்ப் பாஷையும் ஆங்கில பாஷையும் முக்கியமாய் இவ்வித்யாசாலையில் கற்பிக்கப்படுகின்றன. இப்போது 120 பெண்கள் அவ்வித்யாசாலையில் சேர்ந்து அங்கேயே வாஸஞ் செய்துகொண்டு படிக்கின்றதாகத் தெரியவருகின்றது. இத்தகைய வித்யாசாலை இதுகாறும் இந்தியாதேசத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. இவ்வித்யாசாலை மாதிரியாக அநேக விடங்களில் வித்யாசாலைகள் ஏற்படுமென நம்புகிறோம். ஷை வித்யாசாலை மேன்மேலும் அபிவிருத்தியடைந்து உயர்நலமமைந்த மாதுசிரோமணிகளும் பிரஹ்ம வாதினிகளும் உண்டாவதற்கு முக்யஸ்தானமாக நீடூழி காலம் பிரகாசிக்க வேண்டுமென மஹர்ஷிகளின் ஆசீர்வாதத்தைப் பிரார்த்திக்கிறோம்.

பத்திராதிபர்.